# சிரித்திரன்




CHIRITHIRAN

• A CARTOON MAGAZINE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூன் 1971.

# ராஜேஸ்வரி அழைக்கிருள்

சிறந்த சைவ உணவிற்கு

ராஜேஸ்வரி அழைக்கிறுள்,




## ராஜேஸ்வரி பிராமணுள் ஓட்டல்

69, நொறிஸ் வீதி, கொழும்பு

Kings ADVTG



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்முறுவல்

ஆண்டவனுக்கு ஒரு அப்பிளிக்கேஷன்.




ஓ இறைவா... கொஞ்சமாகக் கேட்டு அதிகமாகப் பேசும் மனிதர்களுக்கு ஒரே ஒரு காதையும் இரண்டு வாயையும் படைத்தால் எவ்வளவு வசதியாக இருக்கும்.



ஒருவர்: இவர் காலப் போக்கை உணர்ந்த சிறந்த கலைஞன்·

மற்றவர்: காலத்தை உணர்ந்தவர் தான் சிறந்த கலைஞன்... இப்போ என்ன செய்கிறார்


ஒருவர்: வெங்காயம் நடுகிறார்.




தமிழ்ப்படத் தயாரிப்பாளர்: மூடிக்கேற்ற போத்தில் தேடித் திரிகிறேன்.

நண்பன்: என்னப்பா அது!

தமிழ்ப்பட தயாரிப்பாளர்: நடிகனுக்கேற்ற கதை தேடித் திரிகிறேன்.



Mrs டா மோடிரன்,



Mrs டா: டார்லிங்

Mr டா: யேஸ் டார்லிங்

Mrs டா: பொம்பாய் வெங்காயம் கையிலே பிடிச்சு வெட்டலாம் மினி வெங்காயம் கையிலே பிடிச்சு வெட்டேலாது பெரிய நியூசென்ஸ். கையை வெட்டிப் போச்சு

Mr டா: வட் ஏ பிற்றி.


சிரித்திரனில் வெளியாகும் கதை, கட்டுரை, நாடகங்களில், வரும் பாத்திரங்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே.

தனிப்பிரதி—45

ஆறுமாதச் சந்தா—3-25

வருடசந்தா—6-50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசகரே, வணக்கம்!

அன்பான வாசகரே, சிரித்திரன் உங்களுக்குச் சில வார்த்தைகள் கூறவிரும்புகிறேன். ஈழத்துச் சஞ்சிகைகள் வரலாற்றில் சிரித்திரனின் வேகமான வளர்ச்சி வியப்புக்குரியதல்ல. ஆதரவுக்கரம் நீட்டும் வாசகரும். நேசக்கரம் நீட்டும் விற்பனையாளர்களும், வர்த்தகப் பெருமக்களும், எழுத்தாள அன்பர்களும் தங்களது அயராத ஆதரவுமூலம் சிரித்திரனை வளர்த்து விட்டிருக்கின்றார்கள். இன்று ஈழத்தில் அதிகம் விற்பனையாகும் இதழ் என்ற பெருமையைச் சிரித்திரன் பெற்றமைக்குக் காரணம் நீங்களே மிக விரைவில் 'சிரித்திரன்' மாதமிருமுறை வெளிவர இருக்கின்றான் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் அறியத்தருகின்றோம்.

சிரித்திரனின் மேமாத இதழ், நாட்டின் குழப்பநிலை காரணமாக உரியவாறு வெளிவர முடியவில்லை. இந்த இதழ் யூன் மாத இதழாகும்!

சிரித்திரனின் அலுவலகம் பல்வேறு காரணங்களுக்காக யாழ்ப்பாணத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. சிரித்திரனின் புதிய முகவரியை யாவரும் அவதானித்துக் கொள்ளும் வண்ணம் வேண்டுகின்றோம். பிரதேசவேறுபாடின்றி ஈழத்தின் தரமான ஒரு சஞ்சிகையாகச் சிரித்திரன் வெளிவருவான். சிரித்திரன் மாதமிரு இதழாக மாறி, வாரஇதழாக மலரச் செய்யும் மந்திரம் வாசகர்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. உங்கள் ஆலோசனைகளையும் ஆதரவையும் சிரித்திரன் வரவேற்கின்றான்.

—ஆசிரியர்


★ சிரித்திரன் சம்பந்தமான சகல தொடர்புகளும்.

நிர்வாகி, சிரித்திரன்
67, பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்.

சிரித்திரன் கிளைக்காரியாலயம்
வளமைபோல்
101/4 சாந்தபெனடிக் வீதி,
கொட்டாஞ்சேனை,
கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




க: சிவகாமவல்லி, பூதவராயர் ரேட், திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

கே: மனிதனின் குணத்தை மாற்றுவது எது? இருதயமா, மூளையா?

ப: இருதயம்... மூளையல்ல... கசடறக் கற்றவனிலும் கசடு இருக்கிறதே·

ஃ

எஸ். நவரட்னம், [கலாவாசா, குறம்பைக் குளம், வவுனியா.

கே. அழகு இருக்கும் பெண்ணிடம் ஆபத்து இருக்கும் என்று சொல்கிறார்களே, உண்மையா?

ப. எட்டாத் திராட்சைப் பழம் புளியென்று நரி கூறிய கதை தம்பியது.

ஃ

எஸ். ஓ. எம். கியாறு, 48 காலி வீதி கொழும்பு-6

கே. எந்த வயதில் சிகரெட் புகைப்பது நல்லது.

ப: நூறு வயதுக்குமேல்.

ஃ

கே. எம். கேபிரியற்பிள்ளை, இளமருதங்குளம், வவுனியா.

கே; மகுடியாரே, காதலி தன் காதலனிடம் எதை எதிர் பார்க்கிறாள், எதை விரும்புகிறாள், எதை வெறுக்கிறாள்.

ப: காதலனாக இருப்பதை வெறுக்கிறாள், கணவனாவதை எதிர்பார்க்கிறாள்.

ஃ

ஆ. [illegible]. [illegible]பாநாதன், 123 காலி வீதி, தெகிவளை.

கே: தன்னைப்பற்றி சிந்தியாமல் பிறரைப்பற்றி சிந்திப்பவர் யார் மகுடியாரே.

ப; பஸ்ஸில் இளம்பெண்ணைக் கண்டு எழுந்து இடம் கொடுப்பவர்.

ஃ

ஏ. டபிள்யூ. எம். சலீம், மாவது பொளை, அலவத்துக்கொடை.

கே: பேனா நண்பர்களுக்கும் உயிர்நண்பர்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: பேனா நண்பர் மைசிந்துவார். உயிர் நண்பர் இரத்தம் சிந்துவார்.

ஃ

நா. லோகேந்திரலிங்கம், திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம்.

கே: தபால் கந்தோருக்கும் பாடசாலைக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: இலக்கணம் படிப்பது பாடசாலையில். படித்ததை தந்தி எழுதும்போது மறப்பது தபால் கந்தோரில்.

ஃ

எஸ். சிவராமன். பதுளை.

கே: நான் ஒரு தமிழ்ப் படம் தயாரிக்கப்போகிறேன்... பாட்டு எழுதித் தருவீரா.

ப: 'டா டா டார்லிங் ரோ ரோ ரோ ரோமியோ ஐலவ்யூ ஐலவ்யூ ஐலவ்யூ' எப்படி என்பாட்டு.

எம். இராசதுரை, பளை.

கே: விவாகரத்து இல்லாது இனிமையான இல்லற வாழ்க்கைக்கு எப்படியான திருமணம் நன்று.

ப: பத்தும் பொருந்திய சம்பந்தமாக இருந்தால் போதாது... பதினொன்றும் பொருந்தியதாக இருக்கவேண்டும். சினிமா நட்சத்திரப் பொருத்தமும் பார்க்க வேண்டும். ஆணினதும் பெண்ணினதும் அபிமான நட்சத்திரம் ஒன்றாக இருத்தல்வேண்டும்.

ஃ

எஸ். தியாகராசா, வத்தளை.

கே: எமக்குள் ஏன் ஒற்றுமையில்லை.

ப: எல்லோரும் இன்னாட்டு மன்னர்களென்பதை மிகவும் 'சீரியஸ்'சாக எடுத்துவிட்டார்கள் நம்மவர். மன்னர்கள் ஒற்றுமையாக இருப்பதில்லையே.

ஃ

சி. சிவனேஸ்வரி, மாத்தளை.

கே: தாயானவளுக்கும் கலைஞனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: தாயானவள் பொன்னாடைபோர்த்துவார்களென்ற எண்ணத்தில் பிள்ளை வளர்ப்பதில்லை. கலைஞன் பொன்னாடை போத்துவார்களென்ற எண்ணத்தில் கலை வளர்க்கின்றான்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரசேஸ்வரன்,** நல்லூர் வடக்கு யாழ்ப்பாணம்.

கே: செருக்கு, செருப்பு... இவ்விரண்டிற்கும் உள்ள வேறுபாடென்ன?

ப: செருக்கு உள்ளத்தைப் பாதிக்கும்... செருப்பு உள்ளங்காலைப் பாதுகாக்கும்.

ஃ

**சிங்களாவடி மூர்த்தி,** மேல்மாடித் தெரு, மட்டக்களப்பு.

கே: இவ்வுலகில் மனிதர் இறப்பதற்கென்றுதானே பிறக்கிறார்கள்?

ப: பிறந்த மனிதன் இறப்பான் என்பதில் எல்லோருக்கும் நம்பிக்கை இல்லை. அகவே சிலர் தற்கொலை செய்து கொள்கின்றார்கள் அல்லவா.

ஃ

**எம்,** பி. சிராஜுடீன், 105, கடற்கரை வீதி காத்தான்குடி.

கே: உலகத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நமது ஈழம் எந்த வகையில் துரித வளர்ச்சி கண்டுள்ளது.

ப: கலை உலகில் துரித வளர்ச்சி அடைந்திருக்கிறது. ஓவிய உலகில் ஜோர்ஜ்கீற்ஸ், சினிமா உலகில் லெஸ்டர் ஜேம்ஸ்பீரிஸ் அவர்களும் பெரும் சாதனைகள் புரிந்திருக்கிறார்கள் அல்லவா.

ஃ

**கே. தெய்வேந்திரம்,** கொட்டாஞ்சேனை.

கே: அழகு ரசனை என்பது என்ன?

ப: கிளியைப் பிடித்து இறகைக் கத்தரித்து கூட்டுக்குள் வைத்து ரசிப்பது.

# குத்துவிளக்கு



தன் இலட்சியப் படைப்பான ''குத்துவிளக்கின் ரெஷ்ஷெஸ்'' சைப் பார்த்து குறைகளைக் சுட்டிக் காட்டும்படி திரு. வி. எஸ். துரைராசா விடுத்த வேண்டுகோளை நிறைவேற்றி வைக்க ஓடுகிறேன். ஆனால் அங்கு வந்ததும் படம் ஓடிக்கொண்டு இருந்தது.

பூட்டி இருந்த தியேட்டர்க் கதவை தட்டித் திறக்க நான் நெருங்கியபோது, எந்த சட்ட திட்டத்துக்கும் அடங்காமல் உயிர்த்துடிப்போடு என் செவிகளில் வந்து விழுந்தது, என்னை ஒரு குலுக்குக் குலுக்கி, என்கண்களை நனைக்கிறது. ஈழத்து இரத்தினத்தின் பாடல்— ''பெண்ணைப் பணம் கொண்டு வாவென்று சொல்லுகின்ற பேய்களின் நடுவினிலேஎன்னை-தன்னந்தனியாய் விட்டுவிடாதேதவிப்பேன்முதலிலே...'' என்றபாடல்

விழிகளைத் துடைத்துக்கொண்டு கதவைத் திறக்கப்போன என்னை முந்திக்கொண்டு, வெளியே வருகிறார் கட்டிடக் கலைஞர்.

அவர் விழிகளை நான் பார்க்கிறேன். நனைந்துபோன தன் விழிகளை நான் பார்க்கக் கூடாது என்று மறைக்க முயலும் அவரைத் தொடர்ந்து, அந்தத் திரையோவியத்தை யாழ்ப்பாண விவசாயியின் காவியத்தை நெறிப்படுத்திய யகேந்திரன் வருகிறார் சிவப்பேறிய விழிகளோடு.

வெளியே வரும்போது, அத்தனை விழிகளிலும் குத்து விளக்கு ஓங்கி எரிவதை என்னால் பார்க்க முடிந்தது.


நான் அதைப்பார்க்கவில்லை என்பது எனக்குக் குறையாக இருந்தது. ஆனால் நிறைந்த உள்ளத்தோடு வரும் அவர்களைப் பார்த்தபோது என்குறை நிறைந்தது.

நாளை அது உங்களை நிறைக்கும்.

—திரையன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**சியாங் மேய்ன் சியாங் ராய்! லாம்பாங்!**

'கருடன்' ஏதோ புது மொழியில் பிதற்றுகிறதென்று நீங்கள் முடிவு கட்டுவதற்கிடையில் சொல்லி விடுகிறேன்.

சியாங் மேன் சியாங் ராய், லாம்பாய், ஆகிய இரண்டும் தாய்லாந்தின் வட பகுதியில் உள்ள இரு மாகாணங்கள்.

இவற்றுக்கு மேலாக அண்மையில் 'கருடன்' பறக்க நேர்ந்தபோது கீழே கூட்டம் கூட்டமாக அழகிய இளம் பெண்கள் நிற்பதைக் கண்டு விட்டு கீழே இறங்கியது.

'அமெரிக்கா மாதிரி, தாய்லாந்திலும் பெண்கள் விடுதலை முன்னணி கின்னணி ஏதும் முளைத்துள்ளதோ!'

'கருடனுக்கு இப்படியொரு சந்தேகம்.

கூட்டம் கூட்டமாக நின்ற பெண்களும் மிகவும் கோபமாக காணப்பட்டார்கள்.

எல்லாப் பெண்களும் ஒரே நேரத்தில் பேசிக்கொண்டிருந்ததால் (கடவுளே!) கருடனுக்கு முதலில் ஒன்றும் விளங்கவில்லை.

பின்னர் விஷயம் புரிந்தது!

இந்த வட தாய்லாந்து பெண்கள் எல்லாரும் சிறி தொங்கம்வொங் என்ற பொலிஸ் அதிகாரியின் குடலைபிடுங்கி மாலையாகப் போடுவது என்ற சபதத்துடன் ஒன்றுகூடியிருக்கிறார்கள்.

இந்த ஆத்திரத்திற்குக் காரணம்?

வடபகுதிப் பெண்கள் 'நடத்தை கெட்டவர்கள்' என்று அந்தப் பொலீஸ் அதிகாரி கூறிவிட்டாராம்.

பாங்கொக்கில் நடந்த சமூக நலசபை வருடாந்த கூட்டத்தில் இந்த சிறி என்பவர்பேசும்போது 'பல வடமாகாண ஏழைக்குடும்பங்கள் தமது பெண் பிள்ளைகளை காசுக்காகவிபசாரம் செய்ய அனுப்புகிறார்கள். இந்த பெண்களின் தாய்மாருக்கு தமது மகள்மாரின் கற்பு பெரிதாகத் தெரியவில்லை' என்று கூறிவிட்டாராம்.

பழைய தாய்லாந்து அரச குடும்பத்தைச் சேர்ந்த மாவோடுவாங்டுலன் என்ற இளவரசியை தலைவியாக கொண்ட ஒரு பெண்கள் சங்கம் பின்கண்டவாறு கூறியுள்ளது:

'வடபகுதிப் பெண்கள்சிலர் விபசாரத்துக்கு இழுக்கப்படுகிறார்கள் என்றால் அதற்குக் காரணம் அவர்களது அழகுதான். பணம் அல்ல'. (கருடனின் பார்வையில் அந்த வடபெண்கள் சிவந்த கட்டுடல் அழகிகளாகத்தான் காணப்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.)

இந்தச் சங்கம் இப்போது நாடுமுழுவதும் கூட்டங்களை நடத்தி வடபகுதியில் பெண்களின் மானத்துக்கு பொலீஸ் அதிகாரி சிறியால் இழைக்கப்பட்ட மாசைத் துடைத்தெறியப் போகிறதாம்.

'கருடன்' மெல்ல அந்த 'சிறி' அதிகாரியின் அலுவலகப் பக்கம் போனது.

'என்ன பொலிஸ் பெரிய கொந்தளிப்பாக இருக்கிறதே! போயும் போயுப் பெண்களையா பகைத்துக்கொண்டீர்கள்?' என்று கேட்டது.

'உண்மைகளை திரைபோட முடியாது' என்றார் அவர் காரமாக!

## 'பிங் — பொங்'

செஞ்சீனாவையும் அமெரிக்காவையும் 'நேரம்'போடவைக்க யாரால் முடியும்?

யாராலும் முடியாது, ஆனால் ஒரு சின்ன பிளாஸ்டிக் பந்தினால் அது முடியும்போல இப்போது தோன்றுகிறது.

அண்மையில் அமெரிக்க 'டேபிள் டெனிஸ்' கோஷ்டி சீனாவுக்கு பந்து விளையாடியதை அடுத்து இரு நாடுகளுககிடையிலும் நட்பு ஏற்பட்டுவரும் அறிகுறிகள் தோன்றி உள்ளனவாம்.

ஐ. நா. வில் சீனாவுக்கு இடம் கொடுக்கவேண்டும் என்று அமெரிக்காவே இனி முன்வந்து கேட்கக்கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கத்திய கேடுகெட்ட கலாச்சாரத்தின் சின்னம் என்று 'மினிஸ்கேர்ட்'டை இதுவரை அழைத்த சீனர்கள், இனிமேல் உலகிலேயே மிக அழகானஉடை 'மினிஸ்கேர்ட்' தான் என்று கூறக்கூடும்.

அண்மையில் பிரிட்டிஷ் டேபிள் டெனிஸ் வீராங்கனைகள் சீனுவுக்கு சென்றபோது 'மினிஸ்கேர்ட்' பல சீனர்களைக் கவர்ந்துவிட்டதாம்.

## கண்ணதாசன்

## ஆருடம்

'இன்னும் ஒரு ஆண்டில் ஒரு பொது நோக்குக்காக தமிழக முதல்வர் கருணாநிதியும், காமராஜரும் ஒன்று சேரக்கூடும்' என்று சென்னையில் புதிய காங்கிரஸ் ஆதரவாளரான கவிஞர் கண்ணதாசன் ஆருடம் கூறினுராம்.

அப்படி ஒரு பொது நோக்கு உண்மையாக இருக்கக்கூடும் என்று 'கருடன்' மண்டையைப் போட்டுக் குழப்பியது.

காமராஜர் இன்றுள்ள நிலையில்கருணாநிதியின் மாநில சுயாட்சிக் கோரிக்கைக்கு முண்டு கொடுத்து 'ஸ்டண்ட்' ஏதும் புரியப்பார்ப்பாரா?

இந்த மாநில சுயாட்சி விவகாரம் பற்றி ஒரு புதினம்...

இந்திராவின் புதிய மந்திரியான சுப்பிரமணியம் அதுபற்றிப் பேசித்தீர்த்துக் கொள்ளலாம் என்று கூறியிருக்கிருராம்.

கருணாநிதிக்கு ஒரே 'சுவீப்' தான் போலிருக்கிறது.

# சிந்தனைத் தூறல்

நீ வாழ்க்கையில் உயர வேண்டுமானுல், மற்றவனை உயர விடாமல் பார்த்துக்கொள்.

ஃ

புகழோடு வாழவேண்டுமானுல், மற்றவனுக்கு பணம் கொடுத்து உன்னைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கச் செய்.

ஃ

உன்னை ஒருவன் கெட்டிக்காரன் என்று கூறினுல். தன் பிள்ளைக்கு பாடம் சொல்லிக் கொடு என்று கேட்கப்போகிருன் என்று அர்த்தம்.

ஃ

மற்றவர்கள் சிரிக்க வேண்டுமென்பது எனது தணியாத ஆசை. ஆனுல், நான் சிரிக்க வேண்டுமென்று மற்றவர்கள் நினைக்கிருர்கள் இல்லையே. ஏன்?


ஃ

---

மேல் நாட்டிலுள்ள மொழி பெயர்ப்பு யந்திரங்கள், மணிக்கு 20,000 வார்த்தைகளை மொழி பெயர்த்துத் தள்ளுகிறது.

ஐக்கிய நாட்டு சபையில் மொழி பெயர்ப்பாளராகக் கடமையாற்றும் ஜோர்த்ஸமித் என்பவருக்கு 66 மொழிகள் வெகு தாராளமாகத் தெரிவதுடன் மேலும் சில மொழிகளைச் பேசவும் செய்வாராம்.

எடுத்தாளன்



ஏழை: என்னிடமிருக்கும் பணம் காணுது பிள்ளைகளுக்குச் சீதனம்கொடுக்க.

பணக்காரன்: என்னிடமிருக்கும் பணத்திற்கு பிள்ளைகள் காணுது சீதனம் கொடுக்க.

—ஜோக்கிரடீஸ்


ஏப்ரல் சிரித்திரன், வாசகர்களுக்கு சரியான நேரத்திற்குக் கிடைக்காத படியாலும், அவர்கள் போட்டியில் பங்குபற்ற முடியாத காரணத்தினுலும் பல்லாயிரக் கணக்கான வாசகர்களின் கோரிக்கைகளுக்குஇணங்க எமது ஏப்ரல் ''சிரித்திரன்'' பகுத்தறிவுப் போட்டியை மீண்டும் இந்த இதழில் பிரசுரிக்கிறேம்.

அத்துடன் இதோ உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் ஏப்ரல் சிரித்திரன் பகுத்தறிவுப் போட்டிக் கூப்பன்களை இம்மாச போட்டிக்கும் வாசர்கள் நிரப்பி அனுப்பலாம் என மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேம்.

—ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர்:............................ விலாசம்:..............................

வயது:.................. ..........................

(மாதமொரு முறை)

## மேலிருந்து கீழ்

1. ஔவையாரின் தாயார்.

3. இலங்கையிலுள்ள கடுகதி புகையிரதங்களில் ஒன்று.

4. இந்தியாவின் மறு பெயர்

8. பனையிலிருந்து பெறும் ஒரு குடிவகை.

9. கடைச் சங்கத்தின் தலைவர்.

11. இரண்டாவது மகாயுத்தத்தில் அமெரிக்கரின் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகிய யப்பானிய நகர்களின் ஒன்று.

12. தாராவின் மறுபெயர்.

14. இது இருந்தால் எதுவும் சுலபம்.

15. ஒரு வகைத் தானியம்.

19. இராம இலக்குமணரை பஞ்ச வடியில் ஏமாற்றிய அரக்கன்.

## இடமிருந்து வலம்

1. சூரியனின் மறு பெயர்.

3. யாழ்ப்பாணத்தைப் பரிசாகப் பெற்ற கவியின் புனை பெயர்.

5. சந்திரனின் மறுபெயர்.

6. ஆனாலும் குளித்துக் குடி என்பது ஒரு முதுமொழி,

7. தசரதச் சக்கரவர்த்தியின் வம்சம்.

8. பழம்.

10. இதில் நின்றால் வெல்லலாம் தோற்கலாம்.

11. இருபத்திநான்கு மணித்தியாலங்களைக்கொண்டது.

13. பாம்பு கடித்தவுடன் இதைக் கக்குகிறது.

16. வடிவங்களில் ஒன்று.

17. ஆண்மான்.

18. சிங்கம்.

20. நாம் முதல் முதல் படித்த வகுப்பு.

21. குருசேத்திரத்தில் கிருஷ்ணர் அருச்சுனனுக்கு அளித்த உபதேசம்.

22. இராமாயணத்தை இயற்றியவர்.

23. இராம தூதன்.

## போட்டி நிபந்தனைகள்

1. ஒருவர் எத்தனை கூப்பன் அனுப்ப விரும்பினாலும் நிரப்பி அனுப்பலாம். அவைகள் அனைத்தும் சிரித்திரனில் வெளிவந்தவைகளாக இருக்கவேண்டும்.

2. கூப்பன்களுக்கு கட்டணம் எதுவும் இல்லை. இலவசம்'

3. கூப்பன்கள் யாவும் குலுக்கப்பட்டு, முடிவில் தேர்ந்தெடுக்கப்பட்ட சரியான விடைக்கே முதற் பரிசு அளிக்கப்படும். இரண்டாம், மூன்றாம், நான்காம் பரிசுகளும் கூப்பன்களின் கிரமப்படி அளிக்கப்படும்.

4. முதற் பரிசு பெறுபவரின் புகைப்படம் அவர் விரும்பி அனுப்பினால், சிரித்திரனில் பிரசுரிக்கப்படும்.

5. போட்டியின் விடைகளும் பரிசு பெறுபவர்களின் பெயர் விலாசம் ஆகியன எதிர்வரும் மாத சிரித்திரனில் பிரசுரிக்கப்படும்.

6. விடைகள் அனைத்தும் தெளிவாக விளங்கும் வகையில் எழுதப்பட்டிருக்கவேண்டும்.

7. ஆசிரியரின் தீர்ப்பே சரியானது.

8. போட்டிக் கூப்பன்கள் அனைத்தும் சாதாரண தபாலில் அனுப்பப்படவேண்டும். பிரதி மாதமும் 25ம் திகதி காலை 11 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக, 101/4, சென். பெனடிக்ஸ் மாவத்த, கொட்டாஞ்சேனை, கொழும்பு-13 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

**சிரித்திரனை இலவசமாகப் பெறப்போகிறீர்கள்!**

**இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்!**

முதற் பரிசு—சிரித்திரன் பத்திரிகை 16 மாதங்கள் அனுப்பி வைக்கப்படும்.

இரண்டாம் பரிசு—சிரித்திரன் பத்திரிகை 9 மாதங்கள் அனுப்பி வைக்கப்படும்.

மூன்றாவது பரிசு — சிரித்திரன் பத்திரிகை 9 மாதங்கள் அனுப்பி வைக்கப்படும்.

நான்காவது பரிசு—சிரித்திரன் பத்திரிகை 6 மாதங்கள் அனுப்பி வைக்கப்படும்.

**சிந்தியுங்கள் சிரித்திரன் உங்களிடம் தேடி வருவான்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சொல்லுங்கள் கேட்கிறோம்

★ ...சிரித்திரன் நகைச்சுவை ஏட்டை இப்போதுதான் முதன் முறையாகக் கண்டேன். இம்மாதிரியான நல்ல பத்திரிகையை நானும் என்போன்றோர் இதுவரை அறியாதிருந்து விட்டோம்? குலுங்கவைக்கும் இரத்தினச் சிரிப்புகள், சிந்திக்கவும் கூடிய விஷயங்கள். ஒவ்வொரு சிரித்திரனையும் ஆவலுடன் எதிர்பார்க்கும்.

—எம். எஸ். ஜம்பு, தரணியகலை பகுதி

★ ...சிரித்திரன் வந்துநின்றான் சிரித்து நின்றேன்<br>
—உடனே<br>
பக்கத்தைப் புரட்டி பதில்கடிதம்தேடி அங்கே<br>
துக்கத்தால் குமார்புலம்பும் குரல்கேட்டு துடித்து<br>
சித்திரத்தில் கீறிவைத்த சிரிப்புக்களில் சிரித்தேன்<br>
—உள்ளே<br>
புதுநாவலில் ஆழியான் புதுமையை ரசித்து ஆசையில்<br>
எதுமண்ணாசை என்பதனைக்கண்டு கனகரின்<br>
முத்திரையாய் அமைந்துவிட்ட கதையிலே மூழ்கினேன்<br>
—வாலி<br>
இடிவிழவிழவில் மனம் இடிந்துபோக தத்துவ<br>
முடிவான முத்துக்கள் மனதைத்தொட மொத்தத்தில்<br>
சித்தத்தைத் தொட்டுவிட்டான் சித்திரைச்சிரித்திரன்

என். தியாகராசா, பம்பைமடு, வவுனியா.

★ ...சிரித்திரனைக் காசு கொடுத்து வாங்கிப் படிக்கும் வாசகர்களில் நானும் ஒருவன், சிரித்திரன் நம்மவர்களைச் சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கின்றது.

—ஜோர்ஜ், பருத்தித்துறை.

★ ...ஒவ்வொரு வைத்தியசாலையிலும் கண்டிப்பாக இருக்கவேண்டிய அமுதம் எமது சிரித்திரன். நோயாளிகளின் நோய்களையும் கவலையையும் சிரித்திரன் தீர்க்கும்.

—எஸ். எம். ஜமால், தெமட்டகொட.

★ ...சித்திரை மாதச் சிரித்திரன் சிறப்பாக இருந்தது. ஈழத்தில் தனக்கென ஒருவழி அமைத்து வீறுநடைபோடும் சிரித்திரனை ஒவ்வொரு தமிழ் மகனும் வாசித்துத் தங்கள் ஆதரவை நல்கவேண்டும்.

—ஜோன், எஸ். பேரின்பநாயகம், கொழும்பு—12

சிரிப்பூட்டிச் சிந்தனைக்கு விருந்தூட்டி<br>
பரிந்து மனம் கவலைகொள்ளும் கதைகளூட்டி<br>
அறிவான நல்ல பல விஷயங்கள் ஊட்டி<br>
குறிபார்த்து வீசுகின்ற ஹாஷ்ய சரங்களூட்டி<br>
மகுடியையும் கூட்டிவரும் சிரித்திரனே,<br>
பல்கிப் பெருகி பலகாலம் வாழ்ந்திடுவாய்.

—செல்வி சி. உஷாதேவி, கோட்டைமுனை, மட்டுநகர்

## செய்திச் சிரிப்பு

''கோட்டைக்கும் காங்கேசந்துறைக்கு மிடையில் ஓடும் ரயிலில் மூன்றாம் வகுப்புப் பெட்டிகளில் படுக்கை வசதிகள் செய்து தரப்பட இருக்கின்றன.''

கூட வருகின்ற குழந்தைகளைப் பார்த்துக்கொள்ள ''ஆயா''வும் ஒழுங்கு செய்வார்களா என்று கேட்கிறார் நாலு குழந்தைகளுக்குத் தந்தையாகிவிட்ட என் நண்பர் ஒருவர்.

தாலாட்டுப் பாட்டுகளை ஒலிப்பதிவு செய்து அவற்றையும் ஒலிபரப்பினால் எவ்வளவு நல்லாயிருக்குமென்று சொல்லுகிறான் என் கடைக்குட்டி சந்திரகாந்தன்.

நித்திரை கொள்ளும்போது ரயில் போடுகின்ற சத்தத்தைக் கேட்காமல் இருக்க ஏதாவது செய்ய மாட்டார்களா என்கிறார் எனது மைத்துனர்.

நல்ல நாவல்களை படிக்கத் தருவார்களா என்று கேட்கிறாள் என் மூத்த மகள் வசந்தி.

என்ன இருந்தாலும் ''பேர்த்'' மாதிரி இருக்காது என்று கூறுகிறாள் என் மனைவி.

---


தந்தை: மகனே, சீனியில்லை, மிளகாய் இல்லை, வீட்டு வாடகையோ ஏறிவிட்டது. நகரத்தில் வாழ்வதை விட காட்டுக்குப் போய் சீவிக்கிறது நல்லதென்று எனக்குப் படுகிறது. நீ என்ன சொல்லுகிறாய்;

மகள்: சீக்கிரம் செய்யுங்கள். போகும்போது, அம்மாவையும் கூட்டிக்கொண்டு போங்கள். கூப்பன் புத்தகத்தையும் ரேஷன் கார்ட்டையும் தந்துவிட்டுப் போங்கள். பென்சன் காசை என்னிடம் கொடுக்கும்படி கடிதம் எழுதித் தந்துவிட்டுப்போங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் நாவல்




—அத்தியாயம் மூன்று—

## சுபத்திராக்குஞ்சு

வேப்பம்பூக்கள் தூறிய மழையினால் பிடிப்பிழந்து முற்றமெல்லாம் சிதறிக்கிடந்தன. வெண்மலர் பரவல் தூய வெண் கம்பளத்தினை நினைவுபடுத்தியது. 'கம்'மென்ற வாசனை எழுந்து, திண்ணையில் உட்கார்ந்து பாடசாலைப் புத்தகமொன்றினைப் படித்துக்கொண்டிருந்த ராணியின் மூக்கில் ஏறியது.

'அறுந்த மழை ... உள்ள பூவெல்லாத்தையும் கொட்டிப் போட்டுது என்று சாபம் வைத்தாள், பொன்னு. வடகம்போட வேண்டிய பூக்களை எல்லாம் சிதைத்துவிட்டதே என்ற கவலை அவளுக்கு.

மனைவி போட்ட சாபம் தலைவாசலில் சலவை செய்த உடுப்புகளுக்குத் தண்ணீர் தெளித்து மடித்துக்கொண்டிருந்த வேலுப்பிள்ளைக்குக் கேட்டது.

'நீ மழையைத் திட்டுறாய்... மழை பெய்ததாலைதான் நரியன் குண்டுக்கை கொஞ்சத் தண்ணியாவது நிக்குது...' என்றார்.

'ஆச்சிக்கு ஒன்றுமே கூடாது' என்றாள், ராணி.

வேலுப்பிள்ளை பெரிதாகச் சிரித்தார். பொன்னு அடுக்களைக்குள் போய்விட்டாள்.

மழை பெய்து ஓய்ந்திருந்ததால் வீசிய காற்றில் தண்மை காணப்பட்டது; ராணியின் உடலைக் குளிரச் செய்தது. ஆனால், வேலுப்பிள்ளையின் உடம்பு முழுவதும் வியர்வையில் குளித்திருந்தன. ஸ்திரிப் பெட்டியின் ஊமல் கரி வெக்கை அவரை வியர்வையால் குளிப்பாட்டி இருந்தது.

தளர்ச்சி அடையாத தேகம் அவருடையது. என்றாலும், வயதானவர்தானே. தந்தையைப் பார்க்க ராணிக்குப் பரிதாபமாக இருந்தது. மெதுவாக எழுந்து தலைவாசலுக்குப் போனாள்.

'ஐயா இராசு அண்ணை எப்ப வரப்போகிறாராம்... நீங்க ஒருவர் எவ்வளவு என்று வேலை செய்கிறது...'

வேலுப்பிள்ளை பெட்டியை வளையத்தில் வைத்து விட்டு, வியர்வையைத் துடைத்துக்கொண்டு, மகளைப் பார்த்தார்.

'எப்ப வாறானோ தெரியாது, பிள்ளை! கலியாணமானால் எங்களுக்கெல்லாம் உதவுவான் என்று எதிர்பார்க்க முடியுமா?...'

பொன்னு இவற்றை எல்லாம் கேட்டபடி, தேநீரோடு வந்தாள்.

'அவன் ஏன் இனி எங்களுக்கு உழைச்சுத் தாறான்?... அவனுடைய மனிசிக்குப் புறம்பா இருக்கத்தான் விருப்பம் ... நீங்க இனி கனகசிங்கனை மறியுங்கோ... படிச்சது காணும்...'

ராணி குறுக்கிட்டாள்.

'நாங்க படிக்கிறதுதான் உங்களுக்குக் கண்ணுக்கை குத்துது...'

'ஏதோ படிச்சுக் கிழிக்கத்தானே போறியள்...'

'இருந்து பார், ஆச்சி.'

'படிக்கத்தான் வேணும்... நாங்க படிக்காததாலைதான் இப்படி இருக்கிறம்...' என்றார் வேலுப்பிள்ளை.

ஸ்திரிக்கைப் பெட்டிக்குள் கரி வெடித்துச் சிதறியது.

'சின்னச்சி போனமுறை கொண்டு வந்த கரி சரியில்லை... நெடுக வெடிச்சுப் பறக்குது... நல்லாக் கரியாகவில்லை ... கரியும் முடிஞ்சு போச்சு... சின்னச்சி வாற தவணைதானே. காணவில்லை...'

ராணி துணிகளை எடுத்து அடுக்கிவைத்தாள்.

'ஆச்சி...தேத்தண்ணி...'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படலை 'பொத்' தென்று விழும் சத்தம். கனகசிங்கம் சைக்கிலை வேலியோடு சாத்திவிட்டு வேகமாக வந்தான்.

''துரை வாருர்...வரேக்கையே அவருக்குத் தேத்தண்ணி ஆயத்தமாக இருக்கவேணும்... இல்லாட்டில் கந்தோருக்குப் பிந்திப் போயிடும்...' என்றபடி பொன்னு அடுக்களைக்குள் நுழையும்போது வேலுப்பிள்ளை அழைத்தார்.

'தம்பி...'

'என்ன ஐயா?'

'இஞ்சை வா...'

கனகசிங்கம் தந்தையின் முன் வந்து நின்ருன்.

'கொஞ்சத்தைப் பெட்டி போட்டு வைக்கட்டாம்' என்ருள் ராணி.

'ஐயையோ...நான் சுட்டிடுவன், அக்கா' என்ருன், கனகசிங்கம்: 'நான் வெளியிலை அவசரமாகப் போகவேணும் அக்கா...நாளைக்குச் செய்யிறன்...'

கனகசிங்கம் தயங்கி நின்ருன்.

வேலுப்பிள்ளைக்குக் கண்டிக்கத் தெரியாது.

'சரி போ...' என்ருர்; கனகசிங்கத்தின் முகம் மலர்ந்தது.

'அக்கா தங்கச்சி எங்கே?'

'யார், கண்மணியா, விளையாடப் போயிட்டாள்...'

'இல்லை...சுபத்திரா...'

'அறைக்குள் ஏதோ தைத்துக்கொண்டிருந்தாள்... ஏன்ரா?...'

அக்காவின் கேள்விக்குப் பதில் கூருது அறைக்குள் பாய்ந்தான், கனகசிங்கம்.

'சுபத்திராக் குஞ்சு...'

வேலுப்பிள்ளை ராணியைப் பார்த்தார்.

'என்ன துரை உருக்கமாகக் கூப்பிட்டுக்கொண்டுபோருர்...?'

ராணி சிரித்தாள்.

'அவனுக்கு ஏதோ காசு தேவைப்படுகுதுபோல இருக்கு ஐயா! அதுதான் தங்கச்சியை வளைக்கப் போகிருன்...'

அறைக்குள் அண்ணனும் தங்கையும் ஏதோ வாக்குவாதப் பட்டனர்.

'உண்மையா இல்லை, அண்ணை ... இவ்வளவுதான் இருக்கு...'

'பொய் சொல்லாதையடி.... இப்ப ஏதோ என்ரை கூடாத காலம் கையிலை காசில்லை...உன்னிடம் இருக்குது ... உழைக்கேக்கை தராமலா விடப்போறன்...பார், அங்கினேக்கை தாளா வைச்சிருப்பாய்...,

'உண்மை சத்தியமா இல்லை...'

கனகசிங்கம் வெளியே வந்தான். தலைவாசல் திண்ணையில் அமர்ந்தான்.

'என்ன சகோதரங்கள்...' என்ருன், கனகசிங்கம்.

'ஏன்ரா?'

'ஒரு ஒரு ரூபா தராத சகோதரங்கள் தானே?...'

'உனக்கேன், காசு! படத்துக்குப் போறியா? அவளிட்டை எவ்வளவு பறித்தாய்...?'

கனகசிங்கம் குதித்து எழுந்தான்.

'தாக்கா... தா... என்ரை அக்கா இருக்கனும், நான் இருக்கனும்'

'உண்மையா இப்ப காசில்லை, பிள்ளை' என்ருர் வேலுப்பிள்ளை முன்னெச்சரிக்கையாக.

'பாவம், ஐயா...கொடுத்து விடுங்க...'

வேலுப்பிள்ளை சிரித்தபடி ஐம்பது சதத்தைக் கொடுத்து விட்டார்.

ஃ

வேலை முடிந்து ஓய்வாக வாங்கில் அமர்ந்திருந்தார், வேலுப்பிள்ளை. பொன்னுவும் வெற்றிலையைக்



மனைவி: உங்களை நான் கலியாணம்பண்ணி என்ன சந்தோஷத்தைத்தான் அனுபவித்தன்.

கணவன்: ஏன், என்ன குறைச்சல் உனக்கு?

மனைவி: நீங்க சமைத்துப்போட்டு என்னைக் கொல்லுறீங்களே! ஒருநாளாவது ஹொட்டேல் சாப்பாடு எடுத்துத் தாறீங்களில்லையே.

—அதிமதுரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதப்பிக் கொண்டு திண்ணையில் அமர்ந்திருந்தாள். ராணியும் தாய்க்கு அருகில் இருந்தாள்.

'உனக்கு எப்ப சோதனை, பிள்ளை?' பொன்னு மகளைக் கேட்டாள்.

'என்ன அதிசயம்...கோச்சி படிப்பைப் பற்றிக் கேட்கிறு...?' என்முர் வேலுப்பிள்ளை.

'சும்மா...பேசினுலும் ஆச்சிக்கு நாங்க படிக்கிறதைப்பற்றி உள்ளுக்குச் சந்தோஷம்தான், ஐயா! இன்னும் ஆறு மாதம் இருக்கு, ஆச்சி...'

ஆச்சி வெற்றிலையைச் சிமைக்கிளுவை அடியோடு துப்பிஞள்.

'இஞ்ச பாருங்கோ ... ஆறு மாதத்திலை சோதினை முடிஞ்சதும், சின்னத்தம்பியிட்டை இவளைப் பிடிச்சுக் கொடுத்திட வேணும்...ஊருலகிலை எல்லாம் கலியாணமா நடக்குது...என்ரை வீட்டை இரண்டு குமர் இருந்தும் ஒன்றும் நடக்கவில்லை...' என்று கவலைப்பட்டாள், பொன்னு.

ராணி 'கலகல'வென நகைத்தாள். அந்தச் சிரிப்பொலி பொன்னு ஆச்சியைக் கோபப்படவைத்தது.

'என்னடி சிரிப்பு...?'

'ஒன்றுமில்லை, ஆச்சி! இப்ப சோதனை முடிந்ததும் நான் யூனிவேசிற்றிக்குப் போகப்போறன்... அங்கை மூன்று அல்லது நான்கு வருஷம் படித்து, பட்டம் பெற்ற பின்புதான் மற்றதெல்லாம்...'

'கேட்டீங்களா இவள் சொல்லுறதை ... அண்ணர் அங்கை துடியாத் துடிக்கிருர். எப்ப இவளை மருமகளாகக் கொண்டு போகிறதென்று... வேறு எத்தனையோ இடங்களிலை சின்னத்தம்பிக்குச் சம்பந்தம் பேசி வந்தும் இவளுக்காக தட்டிக்கழித்துவிட்டார்...சின்னத்தம்பி என்ன லேசுப்பட்டவனு...எழுபது வீட்டிற்குத் துணி அடிக்கிருன்...'

வேலுப்பிள்ளை மனைவியைப் பார்த்தார். அவள் ஒரு தாய்க்குரிய ஏக்கத்தோடுதான் பேசினுள்.

'இதோ பார், பொன்னு! படிப்பின் பெருமையை இன்றைக்கு உணர்ந்து இருக்கிறன்... விதானையார் தம்பிப்பிள்ளையைப் பார்...நான் துணி எடுக்க, கொடுக்கப் போற வேளையிலெல்லாம் என்ன சொல்லுகிருர்: 'ஏன் வேலுப்பிள்ளை பிள்ளையளை எல்லாம் படிப்பிக்கிருய். சும்மா மறிச்சுட்டுத் தொழிலைக் கற்றுக் கொடுக்கிறதுக்கு...! படிச்சாப் போல ஏதோ உத்தியோகம் கிடைக்கப் போகிறதே! என்று சொல்கிருர். நம்மீது இரக்கப்பட்டா சொல்கிருர் என்று நினைக்கிருய்? இல்லைப் பொன்னு! எங்கை என்ரை புள்ளையள் படிச்சு நல்லா வந்திட்டா, தங்களிலும் பார்க்க உயர்ந்திடும் என்று பயப்படுகிருர். என்னோடையே எல்லாம் போகட்டும்... என்ரை பிள்ளையள் வெள்ள நீருக்கை நின்று விறைக்கவேண்டாம்! உச்சி வெயிலுக்கை நின்று காயவேண்டாம்...'

பொன்னு ஆச்சி கணவனையே பார்த்தாள். ராணிக்குத் தந்தையின் குணந் தெரியும். வெகு அமைதியானவர். உணர்ச்சி வசப்பட்டுப் பேசத் தொடங்கினுல் கொட்டிவிடுவார்.

'எனக்கு அப்ப பதினெட்டு வயசுதான் இருக்கும் ... அப்புவுக்கு உதவியாகத் தொழில் செய்வேன். அப்பு உடையாரர் குடும்பத்தினருக்கு மட்டுந்தான் துணி அடிப்பார்...எனக்கு நல்ல நினைவு ... ஒருநாள் அப்புவும் நானும் உடையாருக்குச் சலவை செய்த துணிகளைக் கொண்டு போனேம்...எங்களைக் கண்டதும்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையார் கொதித்தார். 'நேற்று கோயிலடியிலே நான் வண்டிலிலே வாறன். நீர் தோள் சால்வையை எடுக்காது நிற்கிறீர். அவ்வளவுக்கு வந்திட்டுது...' என்றார். 'கவனிக்கவில்லை ஐயா நீங்கள் வந்ததை' என்றார் அப்பு. 'கவனிக்கவில்லேயோ, திமிர்...வண்ணாரப் புள்ளேயளுக்கு இப்ப வந்திருக்கிற திமிர் இது' என்றபடி. அப்புவை மார்பில் பிடித்துத் தள்ளிவிட்டார். அப்பு விழுந்து போனார்... நான் பயத்தால் எதுவும் செய்யாது. நின்றேன்...அடிமைச் சேவகம் செய்து இரத்தத்தோடு ஊறிவிட்ட தாழ்வை வெல்ல என்னால் முடியவில்லை. 'படிக்காத நாய்களுக்கு என்ன தெரியும்' என்றாள் உடையார் மனைவி. அதற்குப் பிறகும் அப்பு அவர்களுக்குச் சேவகம் செய்தார்... ஆனால், அந்நிகழ்ச்சியை என்னால் மறக்கவே முடியவில்லை. மாற்றியமைக்கவும் முடியவில்லை...அப்பு செய்ததை இப்ப நானும் செய்கிறன்...'

'ஐயாவிற்கு இவ்வளவு பேசத் தெரியுமா' என்று வியப்படைந்தாள், ராணி. 'அதனால் தான் எங்களையெல்லாம் படிபடியென்று ஊக்கப்படுத்தினரோ?'

∴

கண்மணி கண்கலங்கியபடி வந்தாள். ஒன்பது வயதுச் சிறுமி அவள். ஓடி விளையாடியதனால், உடம்பும் உடையும் அழுக்குப் பட்டிருந்தன.

'என்ன கண்மணி?'

'ஒன்றுமில்லை அக்கா. நாங்க அப்பு வீட்டை விளையாடிக் கொண்டிருந்தம்... எங்களோடை முன்வீட்டு வாத்தியார் வீட்டிலை இருக்கு ஒரு சின்னப்பிள்ளை...சுசி...அதுவும் விளையாடிச்சுது...அப்ப அந்த வாத்தியார் வீட்டு மாமி வந்து, சுசிக்கு அடிச்சுப் போட்டு' வண்ணாரப் பெட்டையளோடை உனக்கென்ன விளையாட்டு' என்று இழுத்துக்கொண்டு போறா...'

ராணிக்குத் திக்கென்றது. 'ஆண்டவா, ஏன்தான் இப்படிக் குழந்தைகளின் மனதில் நஞ்சை விதைக்கிறாயோ?'

'அதிலை உனக்கென்ன கண்மணி!'

'வண்ணாரப் பெட்டையளோடை விளையாடக் கூடாதா?'

கண்மணி கேட்ட கேள்வி, வேலுப்பிள்ளையை உருக்கி விட்டது; சிறிது சினமும் அடைந்தார். என்றாலும் அடக்கிக் கொண்டார்.

---

சுந்தரம்: உனக்கு கதை எழுத வருமா?

வரதன்: வரும்.

சுந்: கவிதை...

வர: பொழியும்

சுந்: நாடகம்...

வர: எழுதி நடிப்பேன்...

சுந்: நாவல்...

வர: வெறி சிம்பிள்...

சுந்: ஏன் அப்ப ஒண்டும் எழுதவில்லை

வர: படிக்கிறவை வீடு தேடி வந்து நொறுக்கினல் என்ன செய்யிறதெண்ட பயம்...

—சம்மு.

---




தரமான கதைகளுக்கு
சுவையான நாவல்களுக்கு
கருத்து செறிந்த கட்டுரைகளுக்கு
**கல்கி** படியுங்கள்

# மாத ஜோதிடம்

—தமிழ் மாத சஞ்சிகை—

ஜோதிடரின் உதவியின்றியே
ஜோதிடம் பார்க்க
சிறந்த மாத இதழ்.

**த. தம்பித்துரை அன் சன்ஸ்,**
யாழ்ப்பாணம். — கொழும்பு.
போன்: 82878




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பார்த்தியா பொன்னு ... ,' என்று மனைவிக்கு ஏதோ ஒரு உண்மையைச் சுட்டிக் காட்டினர்.

'நீ போய் முகத்தைக் கழுவு' என்று கண்மணியை அனுப்பிவிட்டு, ராணி வீட்டிற்குள் போனுள். ஏனே ராணிக்கு அப்போது தனிமை தேவைப்பட்டது. பல சம்பவங்கள் அவள் மனதில் எழுந்து தலைவிரித்தாடின. வகுப்பில் மனே, இங்கு வாத்தியார் மனைவி.

'நாங்கள் அவ்வளவு கேவலமானவர்களா?'

அறைக்குள் நுழைந்த போது, அங்கு மேசை முன் அமர்ந்து சுபத்திரா ஏதோ எழுதிக்கொண்டிருந்தாள். தான் வரும் சத்தம் கேட்டு எழுதியதை மறைத்ததுபோல ராணிக்குப்பட்டது.

'என்ன சுபத்திரா, எழுதுகிருய்?...'

'ஒன்றுமில்லையே...?'

சுபத்திராவின் கள்ளமில்லாத அவ்விழிகளில் எங்கிருந்து இவ்வளவு கள்ளம் புகுந்தது! உடலிலும் மெல்லிய ஒரு நடுக்கம்.

ராணி வேறெதுவும் பேசாது வெளியே வந்துவிட்டாள். கல்லூரிப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு படிக்க முயன்றவளால், படிக்க முடியவில்லை.

(தொடரும்)

# சர்ப்ப சாம்பிராச்சியம் சரிந்தது

பர்மாவில் மாவ்ஸா பகுதியில் ஒருநாள் காலைப்பொழுது அக்கம் பக்கத்து கிராமத்திலிருந்து கிளம்பியது ஒரு பெரிய படை. அத்தனைபேரும் குடியானவர்கள். புறப்பாட்டின் நோக்கம்: காட்டை அழித்து அதை விவசாயத்திற்கு பயன்படுத்துவது. மண்டிக்கிடந்த புதர்களை அவர்கள் வெட்டி வீழ்த்திக்கொண்டிருந்தனர். பிரமாண்டமான பள்ளம் ஒன்று குறுக்கிட்டது. ஒரு காலத்தில் அந்தப் பள்ளம் ராஜ்யத் தலைநகரின் சுற்று அகழியாக விளங்கியது.

அகழிக்குள்ளிருந்த புதர்களை அகற்றிக்கொண்டிருந்தவர்கள் ஒரு சாம்பிராச்சியத்துக்குள் நுழைந்துவிட்டனர். ஆமாம். பாம்புகளின் சாம்பிராச்சியத்தில். அந்தப் பள்ளங்களில் ஆயிரக் கணக்கான பாம்புகள் சடை சடையாகப் பின்னிக்கொண்டு படுத்துக் கிடந்தன. குடியானவர்கள் உஷாராக அவற்றைத் தாக்கு முன் பாம்புக்கூட்டம் விழிப்படைந்து, சீறல்களுடனும் சீற்றத்துடனும் அலைஅலையாகக் கிளம்பிவிட்டன. ஆரம்பமாயிற்று அதிகாரபூர்வமான யுத்தம்—மனிதர்களுக்கும் பாம்புகளுக்கும். ரணகளத்தில் பாம்புகள் கொன்று குவிக்கப்பட்டன. ஆனல் வற்ருத சமுத்திரம் மாதிரி வந்துகொண்டேயிருந்தன பாம்புகள்

மூன்று குடியானவர்களின் உயிரைப் பலி வாங்கிவிட்டது பாம்புப் படை. பதினெட்டுப் பேர் மரணத்தைத் தொட்டுவிட்டு, விஷக்கடி மருந்தினல் பிறகு உயிர் பிழைத்தனர். 8 மணி நேரப் போராட்டத்திற்குப் பின் பாம்புக் கூட்டம் பின்வாங்கி ஓடி ஒளித்தது. குடியானவர்கள் விடவில்லை. பெண் பாம்புகள் சில வற்றை பிடித்துச் சித்திரவதை செய்தனர். பெண் பாம்புகளைக் காப்பாற்ற ஓடி வந்தன ஒளித்திருந்த மற்றப் பாம்புகள், அவைகள் குடியானவர்களின் வேட்டைக்கு இலக்காயின.

எல்லாம் முடிந்து இறந்த பாம்புகள் கணக்கெடுக்கப்பட்டது. நாலாயிரத்துக்கும் மேற்பட்ட பாம்புகள். ஒவ்வொரு பாம்பும் மூன்று, நாலு பவுண்டு எடை. அன்று இரவு குடியானவர்கள் ஒன்று கூடிக் கோலாகலமாக விருந்து சாப்பிட்டனர். 4000 பாம்புகளையும் வித விதமாகச் சமைத்து சாப்பிட்டுத் தீர்த்தனர். விடிய விடிய அந்தப் பாம்பு விருந்து நடந்தது. முறைப்படி சமைக்கப் பட்டால் பாம்பு மாமிசம், தித்திப்பான மீனைவிடப் பிரமாதமாக இருக்குமாம்.

பாம்புகளை வேகவிடும்போது, பாத்திரத்தின் மூடி திறந்திருக்க வேண்டுமாம், விஷம் ஆவியாகப் போக, சரியாகப் பக்குவம் செய்யாவிட்டால் பாம்பு மாமிசத்தால் கண் போய்விடுமாம்.

—சி. கே. எஸ். பாலசந்திரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடப்பாவி!

ஒரு நாள் நான் மூதூர் தபாற் கந்தோருக்கு அருகாமையில் நின்றுகொண்டிருந்தபோது, ஒரு மெலிந்த, வெள்ளை வேட்டியும் சட்டையும் அணிந்த ஒருவர் என்னிடம் ஓடிவந்தார்.


தனது மனைவியை பிரசவத்திற்காக திருகோணமலை பெரியாஸ்பத்திரியில் அனுமதித்திருப்பதாகவும், சென்று பார்க்கப் பணமில்லை என்றும் என்னை ஏதாவது உதவி செய்யும்படியும் வேண்டினார். அவரை நான் முன் பின் பார்த்திருக்காவிட்டாலும், அவர் மேல் ஏற்பட்ட பரிதாபம் காரணமாக இரண்டு ரூபாய் தாள் ஒன்றை எடுத்துக் கொடுத்துவிட்டு நான் போய் விட்டேன்.


இரண்டு வாரங்களுக்குப் பின் ஒரு நாள் நான் திருகோணமலைத் துறைமுகத்தில் நின்ற போது, அதே நபர் வேறு யாருடனோ பேசிக்கொண்டிருப்பதைக் கண்டேன். அவரிடம் அவர் மனைவியின் சுகம் பற்றி விசாரிக்க வேண்டுமென்று எண்ணிக்கொண்டிருந்தபோது அவரே என் அருகில் வந்தார். என்னைத் தெரிந்ததாகவே அவர் காட்டிக்கொள்ளவில்லை. நான் பேசத் தொடங்கு முன் அவரே பேசத் தொடங்கினார்.

தனது மனைவியை பிரசவத்திற்காக மூதூர் மருத்துவ விடுதியில் அனுமதித்திருப்பதாகவும், டாக்டர் கூறிய ஏதோ மருந்தொன்றை வாங்குவதற்காகத் தான் வந்ததாகவும், வழியில் பணத்தை எங்கோ தவறவிட்டதாகவும், மருந்து வாங்குவதற்கும் திரும்பிச் செல்லுவதற்கும் வழியில்லாது நிற்பதாகவும் கூறி, என்னை உதவி செய்யுமாறு அவர் என்னிடம் கேட்டபோது என்னை மீறி நான் சிரித்துவிட்டேன்.

அடப்பாவி! இப்படியும் ஒரு பிழைப்பா?

—மதிவதனன்.



மனேஜர்: டிரைவர்... ஏன் போன வாரம் வேலைக்கு வரவில்லை.

டிரைவர்: வாரபலனின்படி, பிரயாண விபத்து ஏற்படுமென்று இருந்தது. உங்க நன்மையைக் கருதி வரவில்லை சார்.

—அதிமதுரம்.

# ஐயோ அறிவே

சென்னையில் நடைபெற்ற நான்காவது தேசிய புத்தகக் கண்காட்சியின்போது 'பரமார்த்தகுரு கதை' என்ற புத்தகமும் இடம்பெற்றது. அப்புத்தகத்தின் முகவுரையில் கண்டுள்ள செய்தி இது:

'பரமார்த்தகுரு என்னும் பெயர்கொண்ட இந்தக் கதை கடந்த நூறு வருஷங்களுக்கு முன்பே எழுதியிருக்கவேண்டுமென்று தெரிகிறது. நூறு வருஷங்களுக்கு முன், சுப்ரதீப கவிராயர் என்று ஒரு சிறந்த தமிழ் வித்துவானிருந்தார். அவர் காலத்தில், வீரமா முனிவர் என்ற பெயருள்ள ஒரு பிரஞ்சுக்காரரும் இங்கிருந்தார். அவர் தமிழ்ப் பாஷையில் ஆர்வங்கொண்டு சுப்ரதீபக் கவிராயருக்குப் பொருளுதவி செய்து, தேம்பாவணி, பரமார்த்த குரு கதை இன்னும் சில அரிய நூல்களையும் எழுதுவித்துத் தம் பெயரால் அச்சிட்டார். பின் இந்த உண்மையை உணராதார், தேம்பாவணி, பரமார்த்தகுரு கதை முதலியவைகளை அம்முனிவர் இயற்றியவைகளென்றே கொண்டு புகழ்ந்து பாராட்டி வருகிறார்கள்.'

—ஆதாரம்: கசடதபற.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாஹிர் ஹுசைனின் சாட்டை

'சிறு வயதிலேயே கைத் தொழிலும் பழகவேண்டும். படிப்பும் கற்கவேண்டும். உடல், மனம், ஆத்மா இம்மூன்று அபிவிருத்திகளும் சிறு வயதிலேயே ஏற்பட வேண்டும். இத்தகைய கல்வியினுல்தான் நாடு முன்னேற முடியும்—இந்த எண்ணத்துடன் தான் காந்திஜி 'வார்தா கல்வித் திட்டம்' என்கிற அடிப்படைக் கல்வித் திட்டத்தை தொடங்கினுர். இத்திட்டத்தின் ஆதர்ஷ புருஷராக விளங்கியவர் சாஹிர் ஹுசேன். 'ஜமியத் மிலிய இஸ்லாமிய' என்கிற கல்வி தாபனத்தின் தலைவராக இவர் சேவை செய்தபோது இந்த ஆதார கல்வித்திட்ட வளர்ச்சிக்காக அரும் பாடுபட்டார். ஒரு சமயம் ஜாகீர் ஹுசேனிடம் ஒரு தலைவர் 'இந்தக் கல்வித் திட்டம் நல்லதுதான் இதை நடத்திவைக்க 'நல்ல' ஆசிரியர்கள் வேண்டுமே!' என்றுராம். உடனே ஜாகிர் உசேனிடமிருந்து வந்த பதில்:- மற்றக் கல்வித் திட்டத்தை அமுல் நடத்த 'கெட்ட' ஆசிரியர்கள் இருந்தால் போதுமா? என்பதுதான்.

—சேகரி.



முதலாம் பைத்தியம்: அண்ணுச்சி, நான் இறந்திடுவன் போல இருக்கு... என்னுடைய இறுதிச் சடங்குச் செலவிற்கு ஒரு 1000 ரூபா கடன் தாங்க.

இரண்டாம் பைத்தியம்: சரி வட்டியோடு திருப்பித் தந்திடு.

—அதிமதுரம்.

## மாத்திரைக் கதை

## ஞானம்

உலகமெல்லாம் சுற்றி அடித்து நீண்ட பயணம் செய்து வந்த காரின் சக்கரத்தைப் பார்த்து, தெருவிலே நின்ற மின்சாரக் கம்பம் கேட்டது:— 'நீ ஊரெல்லாம் உலகமெல்லாம் சுற்றி வருகிருயே உலகத்தைப் பற்றி ஏதாவது சொல்லேன்...'

இதைக் கேட்ட கார்ச் சக்கரம் அமைதியாகச் சிறு பொழுது இருந்தது. பின்பு அது சொன்னது:- 'நண்பா, நான் உலகத்தையா சுற்றினேன்? என்னையல்லவா நானே பலமுறை சுற்றிக் கொண்டேன். என்னைச் சுற்றியதால்தான் நான் உலகத்தையும் சுற்றினேன்.'

கார்ச் சக்கரமானது மேலும் கொஞ்ச நேரம் மௌனத்தை அனுஷ்டித்தது. அப்புறம் சக்கரத்தின் வாயிலிருந்து சுருக்கமாக நாலு வார்த்தைகள் உதிர்ந்தன:-

'தன்னை அளந்தவன் மண்ணை அளந்தவன்.'

—காசி ஆனந்தன்.

# எட்டே கால்.....

'எட்டே கால் லட்சணமே, எமனேறும் வாகனமே' என்ற பாட்டு வரி எல்லாருக்கும் தெரிந்ததுதான்.

எமனேறும் வாகனம் என்றுல் எருமை மாடு. ஆனுல் 'எட்டே கால் லட்சணம் என்றுல் என்ன என்பதுதான் சிலருக்குத் தெரியாது.

தமிழ் எண்ணில் எட்டு என்பது 'அ' ஆகும்: கால் என்பது 'வ' ஆகும். மொத்தத்தில் எட்டே கால் என்பதைத் தமிழில் 'அவ' என்றுதான் போடவேண்டும். அப்படியென்றுல் எட்டேகால் லட்சணம் என்பது அவலட்சணம் என்பதுதானே கருத்து.

தொகுப்பு: எடுத்தாளன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலம், புஷ்டி, வீரியம், தேஜஸ், ஞாபக சக்தி, ஆரோக்கியம்,

ஆயுள் விருத்தியை தரவல்லதும் உட்கொள்ள நல்ல ருசியும்

ஔஷத வீரியமும் நிறைந்தது:

# ம த ன மி த் தி ர ன்

'மதன மித்திரன்' உபயோகிப்பதனால் வெகு விரைவில் பருமனும் எடையும்

அதிகரிக்கும் என்பதை உறுதி கூறுகிறோம். உங்கள் தேவைக்கு

இன்றே எழுதுங்கள்.

விலை தபாற் செலவுடன்
40 வேளை ரூ. 10-90
80 வேளை ரூ, 20-00

ஏஜன்ட் இல்லாதவூர்கட்கு ஏஜண்ட்கள் தேவை.

## கலா நிலயம்,

தபாற் பெட்டி 372,
19/1, செட்டியார் தெரு,
கொழும்பு-11.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகுந்த வீடு

மல்லிகை சி. குமார்

பார்வதியம்மாள் வீட்டிற்கு முன்னால் மண்டிக்கிடந்த மல்லிகைச்செடியைநோக்கிஓடிய வள்ளிக்குட்டி செடியில் மலர்ந்து மணம் வீசும் மலர்களில் ஒரு கொத்தை உடைத்து அள்ளி முடிந்திருந்த தன் கருங்கூந்தலில் சூடியவாறே பார்வதியம்மாள் வீட்டுப்பக்கம் பார்வையைச் செலுத்தியவள் மரக்கறித் தோட்டத்துப்பக்கமும் தோட்டத்துக்கப்பால் நிற்கும் இரு பலா மரங்கள் பக்கமும் மாறி மாறி தன் பார்வையை ஓட விட்டாள்.

அவள் பார்வைக்கு அவன் ஏனோ தென்படவில்லை. ஒவ்வொரு நாளும் காலையில் இவள் இந்த மல்லிச் செடியை நோக்கி ஓடி வரும் பொழுதெல்லாம் அவன் அந்த இரு பலாமரங்களில் ஏதாவது ஒன்றில் சாய்ந்து பீடியை இழுத்துக்கொண்டோ அல்லது மரக்கறித் தோட்டத்தில் மண்ணைக் கிளறிக் கொண்டோ இருப்பான். இல்லாவிட்டால்... இவளின் வரவுக்காகக் காத்திருப்பவன்போல வீட்டின் முன் வராந்தாவின் சுவரில் சாய்ந்தபடி மல்லிகைச் செடியை பார்த்துக் கொண்டேயிருப்பான்.

ஆனால் இன்று......? வள்ளிக்குட்டிக்கு ஏமாற்றமாயிருந்தது. அவனைக் காணாமல் அங்கிருந்து திரும்ப அவளுக்கு மனம் வரவில்லை.

''அவரைக் காணவேண்டும்'' என்ற ஏக்கம் நிறைந்ததோடு பார்வதியம்மாவையுங் கண்டு இரண்டு வார்த்தை பேசவேண்டும் என்ற ஆசையும் இவளுக்கு மேலிட்டது.


தாவணியை இழுத்து செருகிக்கொண்டவள்... வீட்டுப்பக்கம் எட்டிப்பார்த்தாள். அவன் வெளிப்பக்கம்நிற்பதாகத்தெரியவில்லை. மல்லிகைச் செடியை நோக்கினாள். பனியில் நனைந்து செழிசெழிப்பாக நிற்கும் செடியிலிருந்து மணம் கமகமவென்று வந்தது. அந்தச் செடியின் பக்கத்தில் ஒரு ரோஜாசெடியில் பொன் நிறத்தில் பூக்கள் மலர்ந்திருந்தன. அவைகளில் சிலதை ஒடித்து எடுத்தவள் தன் கன்னத்தோடு ஒத்திக்கொண்டே பார்வதியம்மாள் வீட்டை நோக்கி ஓடினாள். இவள் மட்டும் ரோஜா செடியில் கைவைத்திருப்பதை அவன் கண்டிருந்தால் இந்நேரம் இவள் கன்னம் செந்நிறமாகும்படி ஒரு அறை விட்டிருப்பான். நல்லவேளை அவன் இங்கு இல்லை.

## 2

நெற்றி நிறைய விபூதி மணக்க பூசை அறையை விட்டு வெளியில் வந்த பார்வதியம்மாளின் முகத்தில் வழக்கமாகத் திகழும் மங்கல ஒளி பிரகாசமற்று மங்கிக்கிடந்தது. இவளைக் கண்ட வள்ளிக்குட்டி மரியாதையுடன் எழுந்து ''அத்தையம்மா'' என அழைத்தது இவள் செவிகளில் விழுந்ததோ என்னவோ?


''ஏண்டி வள்ளி... வந்து ரொம்ப நேரமாச்சா... எனக்காக இவ்வளவு நேரம் காத்திண்டு இருந்தியாக்கும்'' என்றுகூடக் கேட்காமல் முகத்தை ''உம்'' என்று வைத்தபடி வெளி வராண்டாவுக்கு சென்றவள்... ஒரு தூணில் சாய்ந்தபடி வாழை மரங்களுக்கூடே பச்சைப்பசேரெனத்தெரியும் தேயிலைக் குன்றுக்களை நோக்கினாள்.

தூரத்தில் தேயிலைச் செடிகளுக் கூடேபோகும் குறுக்குப்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெண்: காதலா... ஐயோ வேண்டாம் காதல்பாதை மேடு பள்ளம் உள்ளது.

ஆண்: பயப்படாதை ஜீப் இருக்கு.

பாதையில் இளைஞர் சிலர் உர மூட்டைகளை சுமந்தபடி உச்சி மலையைநோக்கி ஏறிக்கொண்டிருந்தனர். கனமான உரமூட்டைகளை சுமந்தபடி குறுக்குப் பாதையில் திணறிக் கொண்டு ஏறும் உழைப்பாளிகளின் நிலை பார்வதியம்மாளின் நெஞ்சைப் பிழிய வைத்தது.

''அவர்களெல்லாம் இம்மண்ணின் விசுவாசிகள். அவர்களின் உழைப்பெல்லாம் இம்மண்ணுக்கே. அவர்கள் இந்நாட்டு மண்ணை நேசிக்கிறார்கள். ஆனால் அவன்...? அவளின் மனம் குழம்பியது.

''அத்தையம்மா...! அத்தையம்மா...!'' வள்ளிக்குட்டி அழைப்பதுகூட இவள் செவிகளில் விழவில்லை.

''அத்தையம்மா...'' அழைத்தபடி பார்வதியம்மாளின் அருகில் வந்து விட்டாள் வள்ளிக்குட்டி. அவளைத் திரும்பிப் பார்த்து ஒரு வரட்டு புன்னகையை உதிர்ந்த பார்வதியம்மா... ''ஏண்டி வள்ளி...'' என்றாள். அந்தக் குரலில் தெம்பில்லை.

''என்ன அத்தையம்மா நாப் பாட்டுக்கு கூப்பிடுகிறேன் நீங்க என்னமோப் போல இருக்கிங்க. உடம்புக்கு ஏதாச்சும் வந்திருச்சா...? எனக் கேட்டாள்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லடி... இன்னைக்கிப் புதன்கிழமை அதனாலத்தான்... மனசே ஒரு மாதிரியா இருக்கு''

''ஓ! இன்னைக்கி புதன்கிழமை இல்ல. நாக்கூடமறந்திட்டேன். நீங்க இன்னைக்கு விரதமாச்சே. மாமா புதன்கிழமைதானே செத்...'' பேச்சை முடிக்காமல் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டாள் வள்ளிக்குட்டி. அவளுக்குத்தெரியும் மாமாவைப்பற்றி பேச்சி எடுத்தாலே அத்தையம்மா அழுதுவிடுவாள் என்று.

''வள்ளிக்குட்டி... அவருக்கும் எனக்கும் கல்யாணம் ஆனதும் புதன்கிழமை. நாப் பொட்டுப் பூவை இழந்ததும் புதன்கிழமை தாண்டி...'' பார்வதியின் கண்கள் கலங்கின. அவளின் வார்த்தைகள் வள்ளியின் மனதையும் கலக்குகிறது. என்றாலும் மனதைத் திடப்படுத்திக்கொண்டவள்... பார்வதியம்மாளின் கவனத்தை வேறுபக்கம் திருப்ப முயன்றவள்... ''என்ன அத்தையம்மா வீட்டில் ஒருவரையும் காணமே...'' என்றாள்.

இதைக்கேட்டு வரட்டுத்தனமாக சிரித்த பார்வதியம்மா... ''ஏண்டிப் பொண்ணு அப்படி இந்த வீட்டில் எத்தனைப்பேரு இருக்கோம்? நானும் அவனும் தானே இருக்கோம். அவன் தான் காலையிலே ஏங்கிட்டே சண்டைபிடிச்சுக்கிட்டு...கோபத்தோட போயிட்டான்...''. அவளின் குரல் கம்மியது.

'அடி ஆத்தே... அவரு உங்கக்கிட்ட சண்டைப்பிடிச்சாச்சா. எதுக்கு அத்தையம்மா அவரு உங்கக்கிட்ட சண்டைப் பிடிக்கணும்...'? ஆச்சரியத்தோடே கேட்டாள் வள்ளி.

'அதை ஏண்டிக் கேக்கிறே...' அலுத்துக்கொண்டே பார்வதியம்மா வராண்டாவின் சுவர் ஓரமாகக் கிடந்த பாயில் உட்கார்ந்துவிட்டாள். அவளின் அருகில் உட்கார்ந்த வள்ளிக்குட்டியும் 'எதுனால அத்தையம்மா சண்டை வந்திச்சி...' என நோண்டி நோண்டிக் கேட்டாள். இவளிடம் சொல்லியாவது தன் மனச்சுமையை இறக்கிக்கொள்ளலாம் என எண்ணிய பார்வதியம்மாள் தன் நெற்றியில் கிடந்த நரைத்த கேசத்தை ஒதுக்கிவிட்டாறே...

'வள்ளிப்புள்ள அந்தப்பய இந்தியாவுக்கேப் போகணுமுன்னுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடியாத்துடிக்கிருன். இந்த ரெண்டு மாதமா அவன் இதுக்காக என்னென்னமோ முயற்சி எல்லாம் செய்யுருன். ஆனு எனக்குப்புள்ள அந்த விஷயத்தில் துளிகூட இஷ்டமில்லே. இந்தியாவுக்குப் போகணுமெங்கிற விருப்பமே இல்ல.

நானும் அவன்கிட்ட எதுக்கிடா மருதமலநாம ஈந்தியாவுக்குப் போகணும்? அங்கபோறதைவிட இங்கேயே இருப்போண்டான்னு ஆயிரம் முறைச் சொல்லிப்பாத்துட்டேன். அவன் கேட்கல்ல. போனகிழமை கூட உங்கப்பா அவனுக்கு எவ்வளவோ சொல்லிப்பாத்தாரு, அவன் ம்மியும் அசையில. செவிடன் காதிலே ஊதின சங்காத்தான் போச்சி. இன்னேக்கி அப்படித் தான் அதிகாலேயிலேயே எழுந்திருச்சி அந்தப்பய பண்ணினக்கூத்து...

'யம்மா... நம்மசிலோன் சிட்டிஷன் காடு எங்கன இருக்கு. எடுத்துக்குடே...' ன்னு பிச்சிதான் எடுத்தான். 'மருதமல எதுக்கிட அதை எல்லாம் இந்நேரத்தில கேட்கிறீன்னுக் கேட்டேன்.

'என்னம்மா அப்படிக்கேட்கில நம்ம சிலோன் சிட்டிஷனே எல்லாம் ரத்துசெய்திட்டு இந்தியாப் போக..., படாதுபாடுபடறேன்.

அதுக்காக எத்தனேயோபேரு உதவிசெய்ய இருக்காங்க எனக்குத் தெரிந்த ஒருவர்கூட நுவரெலியாக் கச்சேரியில் கிளாக்கர் வேலேபார்க்கிருர். அவருகிட்டப் போனு எல்லாம் 'கரைக்டர்' முடிஞ்சிடும்".

இதைக்கேட்டதும் எனக்கு நெஞ்செல்லாம் வலி எடுக்க ஆரம்பிச்சிடுச்சி, ஏல மருதமல நாம இந்த நாட்டுப் பிரஜடா... இந்த நாட்டில் நமக்கு உரிமையிருக்கின்னுபெருமையாச் சொல்ல அந்த 'காடு' தாண்டா முக்கியம். அதை அழிச்சிடாதப்பா...' காலில் விழுந்து கும்பிடாக் குறையாகக் கெஞ்சினேன். அவனே என்னே அதட்டினுன்; பிடிவாதம் பிடித்தான்.

'இந்தியாவுக்கு நாமப் போயிடணும், அங்க தாத்தா உம் பேருக்கு எழுதிவச்ச நெவத்தில் யார்யாரோ பாடுபடுருள். நாம அங்க போயிட்டா அவனுங்களே எல்லாம் விரட்டிப்புட்டு நாமபாடுபட்டு வாழலாம். நிலத்த எம்பேருக்கு எழுதிப்புட்டா ஒருபயமுமில்லை...' மண்வெறியில் அவன் கத்தினுன். பிடிவாதத்தோடு சட்டிப் பெட்டி எல்லாம் தூக்கி எறிஞ்சி கடைசியில் டங்குப் பெட்டியில் நான் பத்திரமாக வைத்திருந்த சிட்டிஷங் காடையும் எடுத்துக்கிட்டான். நான் எவ்வளவோ தடுத்தேன், அவனின் வெறி தணியவில்லே.

வள்ளி...நாங்கடைசியா அவன் கிட்ட ஒண்ணு மட்டும் உறுதியா சொன்னேண்டி.

'ஏலே மருதமல... இப்ப நீ எந்தக் கச்சேரிக்குப்போறேன்னுச் சொல்லுறியோ அதே நுவரெலிக் கச்சேரில்ல' நானு நீனு உங்கப்பா எல்லாம் போயிக் கமிஷனர் முன்னுல சத்தியம் பண்ணுனேம் தெரியுமா?


'இந்நாட்டிற்கு எவ்விதத் துரோகமும் நினேக்காமல் உண்மையான பிரசையாய், நாட்டின் மண்மீது என்றும் நன்றியும் விசுவாசமும் உள்ளவர்களாக இருப்போம்...' என சத்தியப் பிரமாணம் செய்தேண்டா. உங்கப்பா கமிஷனர் முன்னுக்கு கம்பீரமாக நின்னு...

'ஐயா நான் இந்த நாட்டில் பிறந்தவன். நான் செத்தா என் உடல் இந்தநாட்டு மண்ணுக்கு தான் உரமாகுண்ணும். என் பரம்பரையே இந்நாட்டு மண்ணுக்காக 'விசுவாசத்தோடும் உழைக்கும் இது சத்தியங்க..., உறுதியான குரலில் அவர் சொன்னபோது நான் பூரித்து நின்றேன். அன்றிருந்து எனக்கும் இந்த நாட்டு மண்மீது தனிப்பற்று ஏற்பட்டுவிட்டது.


பிறவுண்சன்

**பிஷ்மக்ஸ்**

இப்பொழுது உங்கள் வளர்ப்பு மீன்களுக்கு அதிக மகிழ்ச்சியை அளிக்கிறது.




பிறவுண்சனின் பிஷ்மக்ஸ் மீன்களின் இயற்கை உணவாகிய 'பிளாங்ரன்' சேர்க்கப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நிருபர்: உங்களுடைய குல தெய்வம்?

நடிகர்: கண்ணகி

நிருபர்: உங்கள் நேரப் போக்கு?

நடிகை: விவாகம் செய்வதும் விவாகரத்து செய்வதும்.

ஜோக்கிரடீஷ்



அவர் செய்த சத்தியத்தை... அந்தப் புனிதத்தை நீ அழிச்சுடாதப்பா...'' என நான் மருதமலையிடம் மண்டாடினேன்.

''ஓ...! நீ ஏங்கூட இந்தியாவுக்கு வந்தா வா...! இல்லாட்டி நீ இங்கக் கெட நான் அங்கப் போறேன்...'' சினத்தோடு சீறியவன் நான் இவ்வளவுக் காலமாகப் பாதுகாத்த உரிமைப் பத்திரத்தையும் எடுத்துக்கிட்டுப் பொயிட்டாண்டி பொயிட்டான்... போரப்ப... ''பொயிட்டு வாரேன்னுக் கூட சொல்லாமப் பொயிட்டான். இந்த நாட்டில்எங்களுக்கிருக்குற உரிமையைஅழிக்கப்போறான்...'' வேதனையோடு சொன்ன பார்வதியம்மாளின் கண்களில் நீர் பெருகியது.

''அத்தையம்மா நீ வீணாக் கவலைப்படாத... உங்க மகன் தான் இந்தியாவுக்குப் போகத் துடிக்கிதே... நீங்களும் அதுக் கூட இந்தியாவுக்கே போயிடுங்களே. அங்கதான் உங்களுக்கு நிலமெல்லாம் இருக்கே...'' என வள்ளி சொன்னாள். பேச்சிக்காக அவள் இப்படிச் சொன்னாளேத் தவிர அவளின் மனதை, வேதனை அமுக்கிக் கொண்டு தானிருந்தது. ''மருதமலை அக்கரைக்குப் போகப் போகுதே'' என்பதை நினைக்க அவளுக்கு வேதனையாகவே இருந்தது. என்றாலும் அவள்தன் வேதனையை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

''வள்ளிப்புள்ள... என்னையா இந்தியாவுக்குப் போகச் சொல்லுர...? அந்த இந்தியாவுலத் தாண்டி நாப் பொறந்தேன்.'' என்றப் பார்வதியம்மாள் வள்ளியை ஏற இறங்கப் பார்த்துவிட்டு.

வள்ளி... திருச்சிக்குப் பக்கத்தில... துறையண்ணாப் பட்டி என்ற ஊர். அதுதான் என் சொந்த ஊர். நான் பொறந்த ஊர் அதாண்டி. அந்த ஊரு மண்ண நான் சின்ன வயசில் நோண்டி நோண்டித் தின்பேனாம். எங்க அம்மா என்னை இதுக்காகப் பலமுறை தண்டிப்பாங்களாம். எப்படியோ நானும் நாளடைவில் அந்தப் பழக்கத்தை விட்டிட்டேன். அந்த ஊரு ரொம்ப செழிப்பான ஊரு அந்த ஊரில் என் கால் படாத இடமே இல்லேன்னு சொல்லணும்.

''இந்தப் பார்வதிக்குட்டி படு சுட்டியா ஊரே திரியுறாளே... அடக்கி வையுங்கோ... இல்லாட்டிப் பெரியவளானாளோ...

உம் பேரக் கெட்டப் பேராக்கிடுவா...'' என எத்தனையோ பேர் எங்க அப்பாவிடம் வந்து முறையிடு வாங்க. அவர்களின் வாய்க்கு'' அஞ்சி அப்பாவும் என்னைக் கண்டிப்பார். நான் வயசுக்கு வந்ததுக்கப்புறம் நானாகவே அடங்கிட்டேன். வீட்டை விட்டு வெளியில் போகக்கூட எனக்குக் கூச்சமாக இருக்கும்.

இந்த நேரத்தில்தான்... சிலோனில் இருந்து எங்க வீட்டுக்கு வந்த எங்கமாம என் வளர்ச்சியைக் கண்டு தன் மகனுக்கே என்னைப் பெண் கேட்டதோடு மறுமாசமே அவரு மகனை சிலோனிலிருந்து எங்க ஊருக்கு வரவழைச்சி எனக்கும் அவர் மகனுக்கும் எங்க ஊர் பிள்ளையார் கோவிலில் ஜாம் ஜாம் முன்னு திருமணம் நடத்திவச்சாரு.

அப்பவெல்லாம் வெள்ளக்கார துரைமாரு ஆட்சிச் செஞ்சாங்க நெனைச்சநேரம் இந்தியாவுல இருந்து சிலோனுக்கும் சிலோனிலிருந்து இந்தியாவுக்கும் போகலாம். இப்ப மாதிரி பாஸ்போட் இருந்ததாப்புல எனக்குத் தெரியல.

எனக்கும் அவருக்கும் திருமணம் முடிந்த மறு மாதமே... என்னை சிலோனுக்குக் கூட்டிக்கிட்டுப் போறதுக்கு எங்கமாமா முடிவுப் பண்ணிட்டாரு. எனக்கு இதைக் கேட்டதும் ரொம்ப விசனமாப் போச்சி. தாய் தந்தையை விட்டிட்டு... பொறந்து வளர்ந்த மண்ணையும் விட்டிட்டு எப்படித்தான் சிலோனுக்குப் போறதோ என்பதை நினைக்க எனக்கு அழுகை அழுகையாக வந்திச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏண்டிக் கண்ணு அழுவுர... சிலோனுக்குப் போயிக் கஷ்டப் படவா போற... நாங்கத்தான் இங்க வெயிலில் கெடந்து வேகுறோம். வயக் காட்டுலக் கெடந்து உருகுறோம். நீ அங்கப் போயிக் கஷ்டப்படாம பூப் பறிக்கத் தான போற. அழுவாமப் பொயிட்டு வாம்மா...'' என் தாய் எனக்கு ஆறுதல் சொன்னாள். இங்குக் கொழுந்தெடுப்பதை அப்போது ஊரில் ''பூப் பறிக்க'' எனப் பெருமையாகத் தான் சொன்னார்கள். முடிவில்... ''இனி எனக்கு எல்லாம் என் கணவர்தான். அவர்தான் தெய்வம்'' என்பதை உணர்ந்தநான் பெற்றோர் உற்றோர் பிறந்தமண் எல்லாவற்றையும் பிரிந்து அவருடன் சிலோனுக்கு வர சம்மதித்தேன்.

என் கூந்தல் நிறைய பூவைத்து நெற்றி நிறையக் குங்குமம் இட்டு காஞ்சிப்புரப் பட்டுடுத்தி என்னை அழகுப் பார்த்த எங்கம்மா.

''கண்ணு பார்வதி நீ பூவோடும் பொட்டோடும் நித்திய சுமங்கலியா இருப்பம்மா... என்னமோ பொறந்த மண்ண விட்டுப் பிரிஞ்சிப் போறோமேன்னு நீ கவலப் படாதம்மா... இனி நீ புகுப்போற வீடுதாம்மா உன் சொந்த வீடு.'' எனக் கண்ணீரோடு எனக்கு விடை கொடுத்தாள்.

பூவும் பொட்டோடும் கணவனின் கையைப் பிடித்துக் கொண்டே நான் அந்த நாட்டை விட்டு வெளியேறினேன்'' என்ற பார்வதியம்மாளின் கண்களில் நீர் பெருகி தாரை தாரையாக வடிந்தது. வள்ளியின் கண்களிலும் நீர் முட்டியது.

''அத்தையம்மா அதற்கப்புறம் நீங்க இந்தியாவுக்குப் போகலையா?'' எனக் கேட்டாள் வள்ளி.

இல்லை வள்ளி... எனக்குப் போகக் கொடுத்து வைக்கல்ல... நான் இங்கு வந்த ரெண்டாவது வருஷத்தில எங்கமாமா கண்ணமூடிட்டாரு. அதைத் தொடர்ந்து நாங்க சம்பாதித்து வைத்திருந்த சொத்தெல்லாம் ஒரு நாள் கொள்ளப் போயிருச்சி, கால்ரா நோயில் எங்கம்மா செத்துட்டாங்கன்னு கடுதாசி வந்ததும் கூட எங்களால் இந்தியாவுக்குப் போகமுடியல்லை. அதுக்கப்புறம் அங்கப் போகனும் என்ற எண்ணமும் எனக்கு வல்ல.

''பொறந்த வீட்டை விட புகுந்த வீடு தாம்மா உனக்கு முக்கியம்'' என எங்கம்மா சொல்லியிருக்காங்க. ஆகையினால் இந்த நாட்டையே என் புகுந்த வீடா நினைச்சேன். இதுவே எனக்கு முக்கியமானதாகப் பட்டது. அதோடு நான் ''தாய்'' என்றப் புனிதத் தன்மையை இந்த நாட்டில் தான் அடைந்தேன். மருதமலை இங்கத்தான் பிறந்தான். இந்த




புடவைத் தினுசுகளுக்கு

'சிங்காரம்ஸ்'

தங்க நகைகளுக்கு

டைமா நகை மாளிகை

47, செட்டியார் தெரு, கொழும்பு-11. தொலைபேசி: 20875





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டு மண்ணுதான் அவன் பிறந்தமண். ஆனா... இன்னைக்கி அவன் இந்த மண்ணையே மறந்திட்டு அக்கரைக்குப் போகத் துடிக்கிறான். எங்க அப்பாயோட நிலம் ஏம்பேருக்கு இருந்தாலும் எனக்கு அங்கப் போக விருப்பமில்லை. பூவும் பொட்டோடு சுமங்கலியா எங்க ஊரைவிட்டு வெளியேறினேன். பூ விழந்து பொட்டிழந்து விதவையாய் மீண்டும் அந்த மண்ணில் போய் கால் வைக்க எனக்கு மனசுதான் வருமா?

இரண்டு வருஷத்துக்கு முன்ன என் கணவர் சாவும் தருவாயில்...

''பார்வதி... நம்மப் பையனை இந்த நாட்டிற்கு உண்மை விசுவாசத்துடன் உழைக்கச் சொல். இதுதான் நம்ம சொந்த நாடு. நான் பிறந்த நாடு. இது உனக்குப் புகுந்த வீடுப்போல உனக்கும் இந்த நாட்டில் முக்கிய பங்குண்டு.'' என்றார். இதை நானும் மருதமலைக் கிட்டப் பல முறைச் சொல்லிட்டேன். அவன் கேட்காம பிரஜா உரிமையை ரத்துசெய்யப்பொயிட்டாண்டி.... அவருக்கு நான் கொடுத்த வாக்குறிதியை எல்லாம் மண்ணாக்கிடுவான் போல இருக்கு... என்றவாறு கண்ணீரைத் துடைத்துக் கொண்டப் பார்வதியம்மாள்...

வள்ளி நா... இந்தியாவுக்குப் போக மாட்டேண்டி. நான் புகுந்த வீடா நினைக்கிற இந்த நாட்டில் தான் சாவேன். அப்பத்தான் என் ஆன்மா சாந்தியடையும்.'' என்றவள் வள்ளிக் குட்டியைக் கூர்ந்துப் பார்த்து விட்டு...



கஞ்சப்பிரபு: திக்குத்திசை தெரியாத இடத்திலே வந்திருக்குறம் நீ எங்கேயேனும் வழி தெரியாமல் போனாலும் உன்னுடைய நகைகளை கழற்றித் தந்துவிட்டுப்போ...

மனைவி: ?... ?... ?...

எனக்கு ரொம்ப நாளா ஒரு ஆசடி... உன்ன ஏம் மகனுக்கு கல்யாணம் கட்டிவச்சி அழகுப் பார்க்கணும். மருதமலையும் நீயும் ஒண்ணாக் குடும்பம் நடத்தணு முன்னு துடியாத்துடிக்கிறேன். ஆனா அந்தப் பய இப்படி தில்லுமுல்லுப் பண்ணுறானே...'' என்றாள்.

இதைக் கேட்டதும் வள்ளியின் கன்னங்கள் சிவந்தன. ''அத்தயம்மா... அது முரன் பிடிக்காம நாப் பாத்துகிறேன். நான் சொன்னா அது அடங்கிரும் பாருங்களே'' என்றாள். அதே நேரத்தில் வள்ளிக் குட்டியின் தந்தையும் இன்னும் இரண்டொருவரும் பார்வதியம்மாளின் வீட்டிற்குள் வேகமாக நுழைந்தனர். அவர்களின் வேகமும் முகத்தில் ஏற்பட்டிருந்தக் கலவரமும் ஏதோ ஒரு விதத் தடுமாற்றத்தையும் உணர்ந்தப் பார்வதியம்மாள் பீதியுடன் எழுந்து.

''என்னப்பா... என்ன!'' என அவசரப்பட்டாள். வள்ளியின் தந்தைப் பேச முயன்றும் முடியவில்லை. அவருக்கு நா தடுமாறியது. அவர் பக்கத்தில் நின்றவன் நெற்றி வியர்வையைக் கைத்துண்டால் துடைத்தப்படி... ''அம்மா... காத்தால இங்கிருந்து நுவரெலியாவுக்குப் போன பஸ் பாதித் தடத்திலப் பெறண்டிருச்சி. அதுல்ல...போன ஆட்கள்ள... ரெண்டுப் பேரு செத்திடாங்களாம்... அது... அதுல்ல... ஒருத்தர்...நம்ம மருதமலையம்மா...''

''யாரு ஏம் மவன் மருதமலையா.. ?'' பார்வதி யம்மாளுக்கு திரேகமே நடுங்கியது. அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ள முடியாதப் பலவீனமான அவளின் இருதயம் கடும் வேகத்தில் துடித்தது. அவள் துவண்டாள். கருவிழிகள் மேற்குப் புறமாக சொருகிக் கொண்டன. கீழே விழப் போனவளைத் தாங்கிப் பிடித்த வள்ளிக்கு அவள் பெரியப் பாரமானாள். அவளின் தந்தையும் அவளுடன் சேர்ந்து பார்வதியம்மாளைப் பிடித்துப் படுக்கவைத்தனர். வேகமாகத் துடித்த துடிப்பு... உச்சக் கட்டத்தை அடைந்து திடீரென அறுப்பட்டது.


''இந்த நாடுதான் என் புகுந்த வீடு. இதில் செத்தால் தான் என் ஆன்மா சாந்தியடையும்'' என்றப் பார்வதியம்மாளின் ஆன்மா இப்போது சாந்தியடைந்து விட்டது. ''அத்தையம்மா... அத்தையம்மா...'' வள்ளிக்குட்டிக் கதறுகிறாள். அவளின் கண்ணீர் பார்வதியம்மாளின் முகத்தில் சொட்டாக விழுந்து சிதறுகிறது.

(யாவும் கற்பனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகமேடையில் நகைச்சுவை



கே. எஸ். பாலச்சந்திரன்

"இதென்ன தலைப்பு, நாடகத்தில் நகைச்சுவையா அல்லது நாடகமேடையில் நகைச்சுவையா?" என்று நீங்கள் முணுமுணுத்துக் கொள்வது எனக்கு கேட்கிறது.

நாடகங்களில் நகைச்சுவை காட்சிகள் இடம்பெறுவதுபோல நாடகமேடையிலும் எத்தனையோ நகைச்சுவையான சம்பவங்கள் நிகழ்கின்றன. ரசிகர்களாகிய நீங்கள் அவற்றையெல்லாம் கண்டு ரசிக்க முடிவதில்லை. இந்தவகையில் நடிகர்களாகிய நாம் பாக்கியசாலிகள் என்றுதான் கூறவேண்டும்.

எனவே நடிகனாக நான் கண்டு ரசித்து வயிறுகுலுங்கச் சிரித்த சில (நகைச்) சுவையான நிகழ்ச்சிகளை உங்களுக்கும் கூறுகிறேன்.


முதலாவது எனது கல்லூரிக்கால நாடகமொன்றில் நிகழ்ந்தது. கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் நான் படித்துக்கொண்டிருக்கும் வேளையில் எனது தமிழ் ஆசிரியர் என்னைக் கூப்பிட்டு 'பெற்றோர் தின விழாவுக்கு நாடகம் போடவேண்டும் நீயே பொறுப்பேற்று வகுப்பு மாணவர்களைவைத்து நாடகம் ஒன்று தயாரிக்கவேண்டும்' என்று கட்டளையிட்டார். (எனது படிப்பிலிருந்ததைவிட எனது நடிப்பில் அவருக்கு அசாத்திய நம்பிக்கை) கொஞ்ச நாளைக்கு 'நாடகம் பழகுகிறோம்' என்ற சாட்டில் படிப்புத்தொல்லையிலிருந்து விடுதலை பெறலாம் என்ற சந்தோஷத்தில் உடனே என்னோடொத்த (படிப்பிலை என்னைப்போலத்தான் பெரிய புலிகள்) வகுப்பு மாணவர்கள் கொஞ்சப்பேரை சேர்த்துக் கொண்டு இராமகாதையை நாடகமாய்ப் போடுவதாக தீர்மானித்து ஒத்திகையையும் ஆரம்பித்தோம்.

துரதிஷ்டவசமாக இரண்டொருவரைத்தவிர மற்றவர்கள் ஒத்திகைக்கு ஒழுங்காக வரவில்லை. நாளும் கிட்டிவிட்டது. பரவாயில்லை நாங்கள் படிக்கும் பாடப்புத்தகத்திலுள்ள கதை தானே... சமாளிக்கலாம் என்ற நம்பிக்கையுடனிருந்தோம். குறித்த நாளும் வந்தது. பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் யாவரும் பெருத்த கூட்டமாக கூடி இருந்தனர். நாடகம் ஆரம்பிக்க வேண்டியதுதான் பாக்கி.

சொல்ல மறந்துவிட்டேன்... நான்தான் ராமன். 'றொபின் புளூ' நீலப்பைக்கற் பத்துபதினைந்துக்குக்கிட்ட வாங்கி என்முகம், மேல், காலெல்லாம் பூசியிருந்தார்கள். தசரத ராமன் அன்றைக்கு 'றொபின்புளூ' நீல ராமனாக காட்சிதந்தேன்.

நாடகத்தின் ஆரம்பகாட்சி ராமனைக் காட்டிற்கு அனுப்பும்படி கைகேயி வரம்கேட்டதினால் மனம் ஒடிந்த தசரதச் சக்கரவர்த்தி ராமன் காடுசென்றான் என்றதும் பிரிவுத்துயரி தாங்காது மயங்கி விழுந்தார். விழுந்ததுதான் தெரியும் ஆளைக் காணவில்லை. சபையிலே ஒரே பரபரப்பு ராமனைப் பிரிந்த துயரத்தில் தசரதர் உயிரோடை





ஒருவர்: பஸ் என்ன நேரம் புறப்படும்?

கொண்டார்டர்: மூண்டு மணிக்கு

ஒருவர்: இப்ப என்ன நேரம்

கொண்டார்டர்: ஒண்டரை

ஒருவர்: அப்ப அவ்வளவும் இந்த மகாபாரதப் புஸ்த்தகத்தை வாசிப்பம்.

—ஜோக்கிரடீஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலையும் கொண்டு பரலோகம் போய்விட்டார் என்று அவர்கள் நினைத்து விட்டார்கள் போலிருக்கிறது. கைதட்டலும் ஆரவாரமும் காதைப் பிளந்தது திரையை இழுத்து மூடினோம். ஆளுக்கொரு பக்கமாக மேடையில் தசரதரைத் தேடத்தொடங்கினோம்: சிறிதுநேர தேடலுக்குப்பிறகு சீதையாக நடித்த என் நண்பர் (நண்பியல்ல) 'பிராணநாதா' என்று என்னை நாடக பாணியில் அழைத்து நாடக மேடையில் ஏற்பட்டிருந்த ஒரு இடவெளியைக் காட்டினார். (நாடகமேடை வெடித்துவிட்டதா என்று நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்)... எங்கள் நாடக மேடையென்பது பத்துப்பதினைந்து வாங்கில்களை நெருக்கமாக அடுக்கியிருப்பதுதான்: தசரதச் சக்கரவர்த்தி விழுந்த அதிர்ச்சியில் இரண்டு வாங்கில் கொஞ்சம் விலகியிருக்கிறது. அவ்வளவுதான்: தசரதர் மேடைக்குகீழே விழுந்து விட்டார். விழுந்தவர் பயத்தினாலோ, வெட்கத்தினாலோ பேசாமல் இருந்து விட்டார். ஒருவாறு அவரை மேலே தூக்கிவிட்டு வாங்கிலையும் நெருக்கியடுக்கி நாடகத்தைதொடர்ந்து நடத்தினோம்.

ராமனும் (நான்தான்) முக்காடு இட்ட சீதையும் (தலையில் குடுமி இல்லாத... சம்மர் கிராப் தலையை மறைக்க) இலக்குவனுடன் நாட்டைவிட்டு கானகம் அடைந்தார்கள். ஒருநாள் மாரீசன் மானாக வந்து சீதையின் கண்ணில் படும்படி நிற்க. அதைப் பிடித்துத் தரும்படி சீதை என்னைக்கேட்க நான் அந்த மானைத் துரத்தும் கட்டம்.

தோளில் இருந்த அம்புக் கூட்டிலிருந்து அம்பொன்றை (பூவரசம் மரத்தடி.... நல்ல கூராகத் தீட்டப்பட்டிருந்தது) எடுத்து கையில் வைத்திருந்த வில்லின் நாணில் பொருத்தினேன். எய்தேன் மாரீசமானை நோக்கி. வில்லைச் செய்துதந்த நண்பருக்கு மாரீசனாக நடித்தவரில் என்ன கோபமோ தெரியாது. நன்றாக வரிந்துகட்டியிருந்த நாணிலிருந்து புறப்பட்ட அம்பு மாரீசன் போர்த்தியிருந்த மான்தோலையும் துளைத்து அவர் முதுகையும் பதம் பார்த்து விட்டது. இரண்டாவது பாணம் முதலாவதைவிட் மோசம். பார்த்தார் மாரீசன் இனிப் பொறுக்க முடியாது மேடையிலிருந்து ஒரே குதியாக குதித்து முன்னால் குழுமியிருந்தவர்களுக்கிடையே ஓடத்தொடங்கினார். விடுவேனா நான் 'நானும் அவரைப்போலவே குதித்து நாலைந்து வாங்கில் ஏறிப்பாய்ந்து அவரை ஜனங்களிடையில் துரத்திச் சென்றேன். ஓடினவரைக் கண்டுபிடித்தேன். ஆனால் கிட்டப்போகவில்லை. காரணம் மாரீசனாக நடித்தவர் தன்னுடைய தமையனிடம் போய் அடைக்கலம் புகுந்துள்ளார். தமையனாரோ 'கிட்டவந்தால் நல்ல சாப்பாடு தருவேன்" என்று தனது கோபமான பார்வையால் சொல்லாமல் சொன்னார். ஏன் வீண் கஷ்டம் என்ற யோசனையில் 'மாரீசன் மாயமாய் மறைந்து விட்டான்' என்று உரக்கச் சொல்லிக் கொண்டே வந்து மேடையில் ஏறினேன்.

அடுத்த காட்சி இராமனும் இலக்குவனும் சீதையைத் தேடி வரும் வழியில் இராவணனால் இறகுகள் வெட்டப்பட்டு விழுந்து கிடக்கும் ஜடாயுவை காணும் கட்டம்; ஜடாயுவாக நடிக்கும் நண்பர் விழுந்து கிடக்கிறார். நான் அவருக்கருகில் இருந்து நடந்தது என்ன என்று கேட்பதுபோல பாவனை செய்கிறேன். இத்தனைக்கும் ஜடாயுவாக நடிப்பவருக்கு ஒரு வசனம்கூட பாடமில்லை. ஒத்திகைக்குக்கூட வரவில்லை. அவர் கூற நான் இலக்குவனுக்கு சொல்வதாக அவர் பேசவேண்டிய வசனங்களை நானே சொல்லி சமாளித்தேன். நேரம் போய்க் கொண்டிருந்தது. சாகவேண்டிய ஜடாயு செத்துப்போகவும் போகாமல் வசனமும் பேசாமல் என்னையே பார்த்தபடி இருக்கிறார். காரணம் அவர் அந்தக் கட்டத்தில் சாகவேண்டுமென்பதைக்கூட மறந்து விட்டார்



சோமு: ராமு நம்ம அப்பாவும் அம்மாவும் தினமும் சண்டை போட்டுக்கொண்டு இருக்காங்களே நான் என்ன பண்ணட்டும்.

ராமு: அவங்கள் சண்டை போடுகிறதை ரேப்றெக்கோட் பண்ணி வீட்டுக்கு வருகிறவர்களுக்கு போட்டுக் காட்டு கேணிபண்ணன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதுதான். பார்த்தேன் வேறு வழியில்லை மெதுவாக அவருக்கு மட்டும் கேட்கக்கூடியதாக 'செத்துப்போ' என்று சொன்னேன். தான் சொல்லவேண்டிய வசனம் என்று நினைத்த அவர் மிகவும் உரத்தகுரலில் என்னைப்பார்த்து 'செத்துப்போ' என்று சொன்னார். சபையில் எழுந்த ஆரவாரம் அடங்க வெகுநேரம் பிடித்தது.

கடைசிக்காட்சி இராம, இராவண யுத்தம் எங்கள் வகுப்பில் உள்ள மாணவர்கள் அனைவருமே மேடையில் தோன்றினார்கள், இராமனுக்கும் இராவணனுக்கும் விற்போர் நடைபெறுகிறது. இராமனுடைய வானரப் படை வெகு உற்சாகமாக போரிட்டன. கட்டிப்புரண்டு, நிலத்தில் விழுந்தெழும்பியும் போர் நிற்கவில்லை. இடையில் ஒருதிருப்பம் வானரப் படைகள் என்னுடைய வில்லுக்கு வேலை வைக்காமல் இராவணனை மொய்த்து அடிபோடத் தொடங்கி விட்டனர். கொஞ்ச நேரத்தில் இராவணனுடைய படைகளும் சேர்ந்து இரசவணனுக்கு அடி, இடி, உதை கொடுக்கிறார்கள். இராமனாகிய நான் பேசாமல் நின்று வேடிக்கை பார்க்க வேண்டியதாயிற்று. இராவணனாக நடித்தவர் எங்கள் வகுப்பின் 'மொனிட்டர்' அவர் மீது வைத்திருந்த ஆத்திரத்தையெல்லாம் மேடையில் வைத்து காட்டி விட்டார்கள். கடைசியில் இராமனாகிய நான் இராவணனாகிய அவரை அவரது படைகளின் தாக்குதலிருந்தே காப்பாற்ற வேண்டியதாயிற்று.

இன்னுமொரு அனுபவம். தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் நடைபெற்ற ஒரு நாடகத்தின் போது நிகழ்ந்தது 'ஞான ஒளி' என்ற அந்த நாடகத்தில் 'ஜோர்ஜ்' என்ற பாத்திரத்தை நான் ஏற்று நடிக்கவேண்டியிருந்தது. நாடகத்தின் ஓர் முக்கிய



ஒருவர்: பிரசவ ஆஸ்பத்திரியில் வேலைசெய்யும் உன் மகள் கலியாணம் செய்ததாகக் கேள்விப்பட்டேன்... எப்படி பொருத்தம்.

மற்றவர்: நல்ல சாதகப் பொருத்தம்... உத்தியோகப் பொருத்தந்தானில்லை.

ஒருவர்: என்ன!

மற்றவர்: பொம்பிளை பிரசவ ஆஸ்பத்திரியில் வேலை மாப்பிளை குடும்பக்கட்டுப்பாட்டு இலாகாவில் வேலை.

அதிமதுரம்.

---

கட்டம் ஜோர்ஜின் திருமணக் காட்சி. கிறிஸ்தவ மணமகன் அணிய வேண்டிய 'சூட்' உடுப்பு என்னிடம் அந்நேரம் இல்லாமையால் தயாரிப்பாளரே தனது திருமணத்திற்கு தைத்த சூட்டைக் கொண்டுவந்து நாடகம் ஆரம்பிக்க சிறிது முன்னதாகத் தந்தார். டிரவுசரை போட்டுப்பார்த்தேன். அது இடுப்பில் நிற்காமல் வழுக்கி வழுக்கி ஒடுகிறது. வேறு வழியில்லை. எப்படியாவது சமாளிக்க வேண்டும் என்ற நினைப்பில் நான் உள்ளுக்கு போட்டிருந்த சேர்ட்டோடு டிரவுசரை சட்டை ஊசியொன்றால் குத்திக் கொண்டு கோர்ட்டை அதன்மேல் போட்டு மூடிக் கொண்டு வந்து மேடையில் தோன்றினேன். மணமகனும், மணமகளும் முழந்தாளில் நின்று பாதிரியாரிடம் ஆசீர்வாதம் வாங்கி முடிந்தது. எழும்புவதற்கு நான் தயங்கினேன். காரணம் நான் முழந்தாளில் இருக்கக் குனிந்த பொழுது 'படீர்' என ஒரு சத்தம் கேட்டது. அதாவது டிரவுசரை சேர்ட்டோடு சேர்த்துக் குத்தியிருந்த சட்டை ஊசி கழன்று விட்டது. என்ன செய்வது? எழும்பினால் துகிலுரியும் மகாபாரதக் காட்சி இந்த நாடகத்தில் எப்படி வந்தது என்று ரசிகர்கள் ஆச்சரியப்பட வைக்க வேண்டி வரும். எனது தயக்கம் மற்ற நடிகர்களுக்கும் ஒரே புதிர். வியர்த்து ஒழுகத் தொடங்கி விட்டது. கடைசியில் மனத்துக்குள் எல்லாத் தெய்வங்களையும் வேண்டிக் கொண்டு இரண்டு கோர்ட் பைகளிலும் கைகளை விட்டு உள்பக்கமாக டிரவுசரை பிடித்துக் கொண்டு ஆடாமல் அசையாமல் அந்தக் காட்சி முடியும் வரைக்கும் மேடையில் நின்றேன். சில ரசிகர்கள் பேசிக் கொண்டார்களாம். ஜோர்ஜ் ஆக நடித்தவர் திருமணம் செய்து கொள்ளவே பயப்பிட்டார் போலிருக்கிறது என்று. நான் எதற்கு பயப்பிட்டேன் என்று அவர்களுக்குத் தெரியுமா?

---

ரோம ராஜ்யம் செழிப்புற்றிருந்த காலத்தின்போது, யுத்தகளத்திலிருந்து திரும்பிவந்த போர்வீரர்கள் ஓய்வெடுத்துக் கொள்ளாமல் கலப்பையைப் பிடித்து ஏர் உழுது நிலத்தைச் சாகுபடி செய்தார்கள்!

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுகதை:**

★ **குழந்தைகள் அமைதியையும் தனிமையையும் குலைக்கின்றன! இனிமையும் அதுதான் கொடுமையும் அதுதான்!**

# குழந்தைகள்

ஜேர்மன்மூலம்:
கெர்த்தா வெய்னர்ட்

தமிழில்:
கே. கணேஷ்

வெளியே சூரியஒளி விழத் தொடங்கி விட்டது.

நான் குழந்தைகளின் படுக்கையறைக்குள் நுழைந்தேன். மூவரும் தங்கள் கட்டில்களில் எவ்வளவு அடக்க ஒடுக்கத்துடனும் அமைதியாகவும் உறங்குகின்றனர். என் அம்மா அந்தக்காலத்தில் எங்களிடம் 'நீங்களெல்லாம் தூங்கும் பொழுதுதான் அமைதியாகவும் ஒழுங்காகவும் காணப்படுகிறீர்கள்' என்பாள். என்குழந்தைகள் நடந்துகொள்வதை நோக்குகையில் அவள் கூறியது எவ்வளவு உண்மையாகப்படுகிறது.

நேற்று இரவு படுக்கப்போகும் சமயம் சிட்டுக்குருவிகள் புழுவுக்காகச் சண்டையிட்டுக் கொள்வதுபோல் அந்த துணிப் பொம்மைப் பூனைக்கு எப்படி அடித்துக் கொண்டார்கள். இதோ இன்று காலையில் அந்தத் துணி அலமாரிக்கருகில் கவனிப்பாரின்றி நாதியற்றுக் கிடக்கிறது. இந்த எனது மூன்று குழந்தைகளே இப்படித்தான்!

'காலைவணக்கம்பிள்ளைகளே! எழுந்திருக்க நேரமாகிவிட்டது'.

சீர்குலைந்த முடிகளுடன் மூன்று தலைகள் என்னை அரைகுறை தூக்கத்துடன் நோக்குகின்றன. இரண்டு நிமிஷங்களுக்குப் பின்பார்த்தால் அடக்க முடியா உற்சாகத்துடன் தோன்றும் புதிய நாளை வரவேற்கும் பொழுது ஏதோ புயலை அவிழ்த்து விட்டதுபோல நடப்பார்கள்.

காலை உணவுநேரம் அந்த நான்குவயதுக் குட்டியிடம், ஞாயிற்றுக்கிழமைகளில் அணியும் உயர்ந்த உடைகளை மற்ற சாதாரண நாட்களில் உடுத்தக் கூடாது என்பதை தெரியவைப்பதற்கு கால்மணிநேரமே ஆகிவிட்டது. மற்றப்படி வழக்கமான மேல்கழுவல் உடுத்திவிடல் வேலைகளெல்லாம் சாதாரணமாக உள்ளதைவிட அமைதியாக நடைபெற்றது. அப்பா! இது என்னடா அந்தக் கடைக் குட்டி. பாலைக் கீழே கொட்டிவிட்டாள்! துடைக்கத்துணிதேடிக்கொண்டு ஓடுகிறேன்.

'பீட்டர் எனது செருப்பை உதைக்கிறான்!' நான்கு வயதுக் குழந்தை கூக்குரலிடுகிறது.

'கோள் சொல்லி!'

'சத்தம்போடாது சாப்பிடுங்கள்' என்கிறேன் நான் இவர்களைச் சமாளிக்க இரும்பு நரம்புகள் படைத்திருக்கவேண்டும். வெளியேபோய் அவர்கள் வாட்டங்களை வைத்துக்கொள்ள வாய்ப்பாக நல்லவேளை வெயில் காயும் நாளாக இருக்கிறது.

'அந்த சிகப்புப்பந்து எங்கே அம்மா?'

தரையில் குனிந்து தேடித் தடுமாறி எங்கோ மூலையில் கிடந்ததை வெளியே எடுக்கிறேன்.

'என்னிடம் கொடு!'

'இல்லை எனக்குத்தான்!'

இந்த ஒரு விளையாட்டுச் சாமான் மட்டுமே இருப்பது போல அந்தப் பந்திற்காக எல்லோரும் சண்டை.

கடைசியில் ஒருபாடாக கீழே படியிறங்கி ஓடுகிறார்கள். படாரென்று கதவு அடைபடுகிறது. அப்பாடா என்று நானும் பெருமூச்சு விடுகிறேன். அவர்கள் எல்லாம் வளர்ந்துவிட்டபின் ஏற்படும் அமைதியையும் சாந்தத்தையும் கற்பனை செய்ய இதமாக இருக்கிறது. அந்த நாட்களை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். எங்கள் மீதுள்ள கண்காணிப்பை கைவிட்டு அமைதியாக இருக்கும் அம்மாவை எண்ணிப் பொறாமையாக இருக்கிறது.

'அம்மா, அம்மா'!

இப்பொழுது என்ன வந்தது? ஏன் அந்தப் போக்கிரிப் பயல் அப்படி பேய்த்தனமாக மணியை அழுத்துகிறான்? நான் கதவைத் திறக்கிறேன்.

'அம்மா இந்தா பேப்பரும் ஒரு கடிதமும்'.

அது அம்மாவிடமிருந்து வந்த நீண்டகடிதம். கடிதத்தின் கடைசியில்... 'குழந்தைகளை ஒன்றிரண்டு கிழமைகளுக்குக் கொண்டுவந்து விட்டுவை. இங்குள்ள அமைதியும் தனிமையும் பொறுக்கமுடியவில்லை. பொழுதுபோவதே கடினமாகவிருக்கிறது' என்று வரையப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குள்ளநரியும் பெட்டைக்கோழியும்

—குட்டிமாமி—

முன்னொரு காலத்தில், அழகிய ஒரு மலையில் சிறிய வீடு ஒன்று இருந்தது. நான்கு சிறிய யன்னல்கள்; பச்சை நிறமான சிறிய கதவு—அந்த வீட்டிற்கு அழகைத் தந்தன. அச் சிறிய வீட்டில் ஒரு சேவல், ஒரு எலி, ஒரு கோழி என்பன வசித்து வந்தன.

இந்தச் சிறு வீட்டிற்கு வெகு தூரத்தில், இன்னொரு மலை இருந்தது. இந்த மலையில் துப்பரவு இல்லாத இன்னொரு வீடு இருந்தது; உடைந்த கதவு, உடைந்த யன்னல்கள், குப்பை கூழங்கள் என்பன இவ் வீட்டின் அலங்காரங்களாக இருந்தன. இக் குப்பை வீட்டில் ஒரு குள்ள நரியும், நான்கு குட்டி நரிகளும் வாழ்ந்து வந்தன. இவை கெட்ட குணம் உடையவை.

ஒருநாள் காலை, குட்டி நரிகள் நான்கும் பெரிய நரியிடம் வந்தன.

''அப்பா, சரியாகப் பசிக்கிறது...'' என்றது, ஒரு குட்டி நரி.

''நேற்றைக்கும்ஆக இரண்டு கோழிக்குஞ்சுதானே சாப்பிட்டது... பசிக்குது...'' என்றது மற்றைய குட்டிநரி.

பெரிய நரி நீண்டநேரம் தலையை அசைத்தபடி யோசித்தது. இருந்தாற்போல அதன் முகம் மலர்ந்தது.

''ஆ... அடுத்த மலையில் ஒரு வீடு இருக்குது...''

''அங்கே கொழுத்த ஒரு சேவலும், சிவத்த ஒரு கோழியும், கறுத்த ஒரு எலியும் இருக்குது...'' என்று குட்டி நரிகள் சந்தோஷத்தால் குதித்தன.



''அப்பா... அப்பா... கெதியாகப் போய் அவற்றைப் பிடித்து வாருங்கள். நாங்கள் அடுப்பை மூட்டுகின்றோம்...'' என்றன குட்டி நரிகள்.

பெரிய நரி, சாக்கு ஒன்றை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு புறப்பட்டது. நேரம் பத்துமணி இருக்கும். சூரியனும் அதிக வெப்பத்தால் நிலத்தை வருத்தினன்.

''டொக்...டொக்...''என்று சேவலின் வீட்டுக் கதவைக் குள்ள நரி தட்டியது.

''தபால்காரன் வந்திருக்கிறன்... கதவைத் திறந்து கடிதத்தை வாங்கு!'' என்றது சேவல். எலி வேகமாகப் போய்க் கதவைத் திறக்க, குள்ளநரி உள்ளே பாய்ந்தது.

''கடகட....! வெனக் குள்ள நரி சிரித்தது. நரியைக் கண்ட சேவலும் கோழியும் எலியும் பயத்தால் மூலைகளில் ஓடி ஒதுங்கின. குள்ளநரி ஒவ்வொன்ருகப் பிடித்துச் சாக்குப் பைக்குள் போட்டது.

''என்னை விட்டுவிடு...'' என்று எலி கெஞ்சியது.

நரி ஏளனமாகச் சிரித்து விட்டு, சாக்கைத் தூக்கித் தோளில் வைத்துக் கொண்டு தனது வீட்டை நோக்கிச் சென்றது.

சாக்குக்குள் அகப்பட்ட சேவலும் எலியும் அழுதன; கண்ணீர் விட்டன.

''பயப்படாதீர்கள்... தப்புவதற்கு வழி இருக்கிறது... என்னிடம் ஒரு கத்திரிக்கோலும் ஊசியும் நூலும் இருக்கிறது...'' என்று ஆறுதல் கூறியது, பெட்டைக்கோழி.

நல்ல வெயில். சாக்கைத் தூக்கிக் கொண்டு நடந்ததால் குள்ளநரி களைத்துப்போய் விட்டது. சாக்கு மூட்டையை ஒரு மரத்தடியில் வைத்து விட்டு, நிழலில் குள்ளநரி படுத்து நித்திரை கொண்டது.

''கொர்... கொர்...'' என்ற குறட்டைச் சத்தத்தைக் கேட்ட பெட்டைக் கோழி, கத்திரிக் கோலால் மெதுவாக சாக்கை வெட்டியது. மூன்றும் வெளியே வந்தன. தம்மளவு பாரமுள்ள மூன்று கற்களைச் சாக்கிற்குள் தூக்கி வைத்து,தைத்தன. அதன் பின் ஒரே ஓட்டமாகத் தமது வீட்டிற்கு வந்து கதவைப் பூட்டிக் கொண்டன.

நித்திரை விட்டு எழுந்த குள்ளநரி, சாக்கைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு வீட்டை அடைந்தது.

பெரிய கிடாரமொன்றில் நீரைக் கொதிக்க வைத்தபடி, குட்டிநரிகள் காத்து நின்றன. தூரத்தில் சாக்கு மூட்டையோடு தந்தை வருவதைக் கண்டதும் அவை நாக்கைச் சப்புக் கொட்டின.

பாவம், குட்டி நரிகள்!

(மூலம்: ஆங்கிலம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தத்துவ முத்துக்கள்



இப்பகுதியில் காதல் பற்றி அறிஞர்கள் கூறிய சில தத்துவ முத்துக்களை தொகுத்துத் தருகிறூர் மூர்த்தி.

காதல் என்பது ஓர் உண்மையான வேகமே. சந்தேகமில்லை. சில சமயம் இரு பக்கமும் காதலுண்டாகி விவாகமும் முடிவு பெறுகிறது. சில சமயம இருபக்கமும் காதல் இல்லைதான். அதனுலேயே வாழ்க்கை காதலற்றுப் போக வேண்டியதில்லை.

—ராஜாஜி

உலகைக் கட்டியாளும் ஓர் உயர்ந்த அரசனாக இருப்பதைக் காட்டிலும், ஆண் மகனாகிய நீ ஒரு பெண்ணின் மேன்மையான அன்பு நிறைந்த உள்ளத்தின் சக்கரவர்த்தியாக இருப்பதுமேல்.

—இங்கர்சால்

காதல் புதிதாக உதயமாயினும் சரி; அல்லது பழைய காதல் மறுபடியும் புதுப்பிக்கப்பட்டாலும் சரி; அதிலுள்ள இன்பமும், இனிமையும் எப்போதும் ஒரே தன்மையாகவே இருக்கும்.

—நத்தானியேல்ஹாத்தான்

ஆண் பெண் உணர்ச்சி வேகம் என்பது ரம்மியமானது; மிகவும் உயர்ந்தது; அதில் வெட்கம் கொள்ள ஒன்றுமே இல்லை. ஆனால் அது படைப்புத் தொழில் ஒன்றுக்காகத்தான் ஏற்பட்டதாகும்.

—காந்திஅடிகள்

காதல் மகா சக்தி வாய்ந்தது; வசீகரக் குணம் மிகுந்தது; வயோதிகத்தையும் வாலிபமாக்கி விடத் தக்கது. வாலிபர் வாழ்க்கைக்கு உயிரும் ஊக்கமும் அளிப்பது காதல்தான்.

—அன்னு

உலக வளர்ச்சிக்காக மாயா சக்தியால் ஏற்பட்ட காந்த சக்தியே காதல். இவ்வுணர்வைத் தடுக்கவோ தப்பவோ யாராலும் முடியாது.

—சுத்தானந்தர்

---

தேள் எப்போதும் தனியாகத் தான் வசிக்கும் காரணம் ஒவ்வொரு தேளும் மற்ற தேள்களை மிகவும் மட்டமாக எண்ணும் சுபாவம் படைத்தவை. ஆகையால் தேள்களுக்குள் எப்போதும் ஒற்றுமை கிடையாது. தேள்கொட்டின இடத்தின் கடுப்பு நிற்க 24 மணி நேரம் ஆகும்.

## லிங்கன் வாழ்வில்

நீதி மன்றம் ஒரே பரபரப்புடன் இருந்தது. ஓர் ஏழை இளைஞன் மீது குற்றம் சாட்டப்பட்ட வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்தபொழுது, சாட்சி இளைஞனுக்கு எதிராக ''இவ்விளைஞன் அன்று கொலை செய்ததை நான் தெளிவாக நேரில் பார்த்தேன; பௌர்ணமி நிலவு வெளிச்சத்தில் தெளிவாகத் தெரிந்தது'' என்று கூறினன்.

உடனே லிங்கன் எழுந்து, திகதி, நேரம் கிழமை என்ன? என்று கேட்டார். அவன் கூறியதும், லிங்கன் பஞ்சாங்கத்தைப் புரட்டினர் அன்று அமாவாசையாக இருந்தது என லிங்கன் கூறினர்.

கனம் கோட்டார் அவர்களே! இந்த சாட்சி தேதி நேரம் கிழமை குறிப்பிட்டு நிலவொளியில் பார்த்தேன் என்று கூறினர். அது தவறு. இதோ பாருங்கள் அன்று அமாவாசையாக இருந்தது. எவ்வாறு நிலவொளியில் பார்க்க முடியும்? சாட்சி கூறியது தவறு; என நீதியை எடுத்துரைத்தார். பின் சாட்சி தலை குனிந்தான்.

---

ஒருமாணவன் தன் படிப்பு முடிந்ததும் ஒரு பெரிய வியாபாரியை அனுகி ''ஐயா நான் வியாபாரம் தொடங்க யோசிக்கிறேன். நான் முதலில் என்ன செய்ய வேண்டும் என்று எனக்கு சில அறிவுரைகள் கூறுங்கள் என்றுன் வியாபாரியிடமிருந்து ''உன் கைக்கடிகாரத்தை விற்றுவிட்டு ஒரு அலாரம் கடிகாரம் வாங்கும்'' என்ற பதில் வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கினி பகவான்

சென்விரான்ஸிஸ் கோவிலுள்ள வீடொன்று தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தது. அந்த வீட்டுக்குள்ளே குழந்தை யொன்று அகப்பட்டு அலறிக் கொண்டிருந்தது. இதையறிந்த ட்ரு பிராண்டன் என்பவர் தன் உயிரையும் பொருட்படுத்தாது எரியும் வீட்டுக்குள் புகுந்து குழந்தையைத் தூக்கிக் கொண்டு வெளியே வந்து விட்டார். இவருடைய துணிச்சலான, தியாகமான செயலை மனதாரப் பாராட்டினர் அந்த ஊர் மக்கள்.

இரண்டுமாதம் கழித்து லாஸ் எஞ்சலில் உள்ள வீடொன்று திடீரென தீப்பற்றிக் கொண்டது. திரு திருவென எரிந்து கொண்டிருந்த அந்த வீட்டுக்குள்ளேயும் ஒரு குழந்தை சிக்கித் தவித்துக் கத்தியது. இங்கேயும் ட்ரு பிராண்டன் வந்துதான் அந்தக் குழந்தையைக் காப்பாற்றினர். நெருப்பணைக்கும் படையினர் இவருடைய தீரமானச் செயலைப் பாராட்டி கைகுலுக்கியதோடு, நாட்டு மக்கள் இப்படித் தியாக மனப் பான்மையோடு இருந்தால் எவ்வளவோ நல்லது தெரியுமா என்று வாயாரப் புகழ்ந்தும் சென்றனர்.

இரண்டு வாரம் கழித்து இதே ஆசாமி நெருப்பணைக்கும் படையினர் வருவதற்கு முன்பே, நெருப்புப் பிடித்த வீட்டுக்குள் நுழைந்து மூன்று குழந்தைகளை மீட்டதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைக்கவே, அவர்கள் மனதில் சந்தேகம் முளைத்து விட்டது. அலசிப் பார்த்ததில் பொலிஸார் கைக்கு அவன் கைப்பட எழுதிய 'டைரி' அகப்பட்டது. அதில் பின்வரும் வரிகள் எழுதப் பட்டிருந்தன. ''மீண்டும் இதைச் செய்தேன். இந்தமுறை கட்டாயம் நான் பதக்கம் பெறுவேன். நியூயார்க்கிலும் இப்படிச் செய்ய வேண்டும்.''

பொலிஸார் ட்ரு பிராண்டன் கைது செய்து தீவைத்த குற்றத்திற்காக சிறைக்குள் தள்ளி விட்டனர்.

அடுத்தடுத்து வந்த அலைகளோடு போராடி எதிர்நீச்சலடித்து பையனைக்கரைசேர்த்தான் ஹாரவர்ஸ்டென்னிங். கடற்கரையோரம் இருந்த மக்கள் இவனுடைய புண்ணிய கைங்கரியத்தை உளமாரப் பாராட்டினர். படகிலிருந்து கடலிலே யிருந்த பையனைத் தான் காப்பாற்றியதாக ஹாவர் ஸ்டென்னிங் கூறினன். மூர்ச்சையாகியிருந்த பையன் கொஞ்ச நேரம் கழித்து மயக்கம் தெளிந்து கண் விழித்தபோது அவனை விசாரித்தனர். ''இவர் என்னைக் கடலில் தள்ளினர் என்று சுட்டிக் காட்டினன். கூடியிருந்த மக்கள் அதட்டி பயமுறுத்தி கேட்டபோது தியாகச் செயல் பதக்கம் பெறவே இப்படிச் செய்ததாக உண்மையை ஒப்புக் கொண்டான் டெகிஸாஸில் இது நடந்தது.

⁂ ⁂ ⁂



ஒருவர்: நீ எடுத்த மாப்பிளை என்ன பெரிய உத்தியோகஸ்தனே?

மற்றவர்: இல்லை.

ஒருவர்: அப்ப என்ன பெரிய படிப்பாளியோ?

மற்றவர்: இல்லை.

ஒருவர்: அப்ப என்ன பெரிய முதிசகாரனே?

மற்றவர்: சீ சீ அதொன்றுமில்லை அவருக்கு சுவீப்பிலை முதலாம் பரிசு கிடைச்சிருக்கு.

—ஜோக்கிரடீஸ்.

## கடிகாரத்தில் சண்டை

சுவர் மாட்டிக் கடிகாரத்தின் பகுதிகளுக்குள் ஒரு விவாதம் மூண்டு விட்டது. நான்தான் முக்கியம் கடிகாரத்திற்கு நானே முகமாயிருக்கின்றேன் என்றது டயல். இல்லை நாங்கள் தான் முக்கியம் நாங்களே நேரம் காட்டுகிறோம் என்றன முட்கள்.

நீங்கள் எதற்கு? நீங்கள் தேவையே இல்லை, நான்தான் நேரத்தை உரக்க வெளிவிடுகிறேன் என்றது மணியடிக்கும் கிண்ணம்.

பேஷ்! பேஷ்! என்று கேலியாகக் கூறிவிட்டு 'ஒன்று மட்டும் சொல்ல விரும்புகின்றேன். நான் இந்தப் பக்கமும், அந்தப் பக்கமும் ஆடியாடி அசையா விட்டால், நீங்கள் எல்லாம் என்ன தான் செய்வீர்களோ நான் அறியேன்! என்றது பெண்டுலம் குண்டு.

மெயின் ஸ்பிரிங் மாத்திரம் பேசவேயில்லை மிக்க அடக்கத்துடன் மௌனம் சாதித்தது.
(இது ருஷிய நாட்டு உவமைக் கதை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாந்தவன்

[பைரவி]

காலை எட்டு மணிக்கெல்லாம் அவசரமாக உடுத்துக்கொண்டு கந்தோருக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தேன். இருவர் நான் குடியிருக்கும் கட்டிடத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். அவர்களின் பெட்டி படுக்கைகளைக் கண்டவுடனேயே அடுத்த அறையை வாடகைக்கு எடுத்தவர்களாகத்தான் இருப்பார்கள் என்பதைப் புரிந்து கொண்டேன். அவர்களிருவரும் நெருங்கிய நண்பர்களாகத்தான் இருப்பார்கள் என்பதை அவர்களின் உரையாடலே பறைசாற்றிற்று. இத்தனையையும் உணர்ந்து கொண்டு பஸ்ஸ்ராண்டுக்கு நடையைக்கட்டினேன்.

ஃ

இரவுச் சாப்பாட்டை முடித்துவிட்டு மேசையின் முன்னால் உட்கார்ந்து கொண்டு ஆழ்ந்த யோசனையில ஆழ்ந்திருந்த என்னை அடுத்த அறையில் நிகழ்ந்த பேச்சுக்குரல் கொறகொற வென்று மேலே இழுத்து வந்தது. எத்தனையோ அநுபவங்கள் எனக்கு அடுத்த அறைமூலம் கிடைத்திருக்கின்றன. அதனால் சற்று உன்னிப்பாகவே கவனித்தேன்.

''இத்தனை நாளும் உன்னை நம்பியிருந்த என்னை இப்பிடி ஏமாத்திப் போட்டாயே படுபாவி.''

''உன்னைய நானா எப்பிடி ஏமாத்திறது. நீயிதான் என்னைய ஏமாத்தினது.

''கடைசி நேரத்திலை காலை வாரிவிட்டுட்டு கதையா அழக்கிறாய்?...நாயே''

''யாரு நாயி? நீயா? நானா நாயி? என்கிட்டவாலை ஆட்டினது நீயிதானே!''

''பொத்தடாவாயை உன்னட்டை நானா வாலை ஆட்டி வந்தன. நல்லாயிருக்கு கதை... பரதேசி...''

''உனக்கு ரோசம் வாறது ஹீ... ஹீ... ஹீ... என்னோடை சேர்ந்து ஒரு வீட்டில் கழவெடுத்ததில்லை நீயி?''

''உன்னைப்போல போக்கிரியா நானா? கதை விடுறது நீயி என்னோடை? ஆகா நல்லாயிருக்கிறது...''

''ஏதோ இண்டைக்கு கழவாடினதை சரியாப் பங்கிடு இல்லாட்டா பேந்து நடக்கிறது வேறை''

இத்தனையும் கேட்டுக்கொண்டிருந்த எனக்கு சிந்தனை சுழன்றது. போயும் போயும் கள்வரையா வீட்டுக்காரர் கொண்டு வந்து சேர்த்திருக்கிறார்? என்னை நானே கேட்டுக் கொண்டேன் காலையில் ஒத்த நண்பர்கள்போல வந்த தமிழ்வாலிபர்கள் போன்றிருந்தவர்கள் கள்வர்கள்தானா இந்தக்காலத்திலே யாரைத்தான் நம்புவது? ஒருவேளை நான் வேலைக்குச் சென்றதன் பின்பு வேறுயாராவது வந்தார்களோ என்னமோ?

என் சிந்தனையைத் தடைப்படுத்தா செவிகளைக் கூர்மையாக்கினேன். அவர்கள் அப்போதும் ஏதோ தகராறு செய்து கொண்டு தான் இருந்தார்கள். எந்த நேரத்தில் என் அறைக்கும் எனக்கும் கன்னம் வைத்துத்துலை வார்களோ? மறுநாள் எனக்கு லீவு நாள். எப்படியாவது அவர்களைப்பற்றி வீட்டுக்காரரிடம் புகார்செய்து பாதுகாப்புத் தேடவேண்டியதுதான் என்று தீர்மானித்துக் கொண்டேன். அவர்களை அப்படியே விட்டால் நம்ம பாடு அதோ கெதிதான். அன்று அவர்கள் சண்டையில்என் அறைக்குக் கன்னம் வைக்கப்படமாட்டாது என்ற நினைவு எழுந்து எனக்கு சிறிது தெம்பை அழித்தது. அந்தத் தெம்பு தந்த ஆறுதலுடன் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டேன். கனவிலை கூட அவர்கள் இருவரும் வந்து நின்று சிரித்தார்கள்.

ஃ

நன்றாகத் தூங்கிப் போய் விட்டேன் என அறிந்து படுக்கையினின்றும் துள்ளி எழுந்தேன். துவாயையும் பற்பொடியையும் எடுத்துக் கொண்டு வாசலுக்கு வந்தவன் அடுத்த அறையில் நிகழ்ந்த சிரிப்பொலியைக் கேட்டுத் திகைத்து விட்டேன் சிரிப்பொலியைத் தொடர்ந்து சரளமாகப் பழகும் பேச்சொலி, முழுவதும் இரவு நான் கேட்ட பேச்சொலிக்கு முற்றும் முரணானதாகவே இருந்தது. எனக்கு எல்லாமே ஆ(ன்)ச்சரியமாக இருந்தது. 'எல்லாம் மாயை தானா' என்று எண்ணியபடி கிணற்றடிக்கு நடந்தேன். சிறிது பொழுதில் அவர்களும் வந்து சேர்ந்தார்கள்.

அந்த முகங்களில், பேச்சில் கள்வர்க்குரிய அல்லது பகைவர்க்குரிய எந்த அமைப்புமே இல்லை. இருவரும் சுத்தமாகத்தமிழ் பேசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணுர்கள். ஒருவேளை இரவு நான் கேட்ட பேச்சொலி யாருடையதோ. ஆனல் இரவு நான்கேட்ட குரல்களுக்கும் இப்போது கேட்கும் குரல்களுக்கும் ஏதோ ஒரு ஒற்றுமை இருப்பதாகவே எனக்குப்பட்டது. துலாவை கிணற்றுள் தாழ்த்தினேன்.

'நீங்களும் இங்குதான் இருக்கிறீங்களா?' ஒருவன் கேட்டான் நட்பைநாடும் ஸ்தாயி குரலில் தெரிந்தது.

கள்வர்களுடன் அதிகம் கதைத்தல்கூடாது என்ற எண்ணத்தால் பதிலுக்கு 'ஓம்' என்றேன்.

'அடுத்த அறையிலா இருக்கிறீங்க' மற்றவன் கேட்டான் சுத்தமான தமிழேதான்.

அதற்கும் 'ஓம்' என்ற ஒரு சொல்லிலே தலையாட்டினேனே தவிர மீண்டும் ஏதாவது கதைக்க வேண்டும் என்ற எண்ணத்தால் 'உங்களில் யாராவது சிங்களவர்களா' என்று கேட்டுவைத்தேன்.

'அடாடா இரவு நாங்க இரண்டுபேரும் பிதற்றினதை நீங்க கேட்டிருக்கிறீங்க போல் இக்கே?'

'ஆம்' என்பதற்கறிகுறியாக தலையாட்டிவிடவே ஒரு புன்முறுவலும் செய்து கொண்டேன். மனதாலே பல சிந்தனைகள்.

'உங்களுக்கு எங்கடை பிதற்றல் இடைஞ்சலா இருந்தால் பொறுத்துக்கொள்ள வேணும் இன்னும் இரண்டு நாளைக்குத்தான் பிதற்றுவோம்.'

'ஏன் பிறகு வேறுவீடு பார்த்துவிட்டீர்களோ' ஆற்றுமல் கேட்டேன்.

'அப்படியெல்லாம் இல்லை. நகரமண்டபத்தில் நாளன்டைக்கு நாடகம் அரங்கேற்றம் அதற்குத்தான் பிறக்ரீஸ்' பண்ணுறநாங்கள்' நான் துலாவை இறுகப்பற்றிக் கொண்டேன்.

'இவர்களைபோய் கள்வர்களெண்டு...' என்மூளையில் இடி விழாதா? ஒருபடியாகச் சமாளித்துக்கொண்டு,

'என்ன நாடகம்?' என்றேன்.

'ஏமாந்தவன்' இருவரும் பதில் கூறினர்.

'ஏமாந்தவன்' என்வாய் முணுமுணுத்தது.

நானும் ஏமாந்தவன்தானு? ஆம் ஏமாந்தவன்.

(யாவும் கற்பனை)

---

'இன்றைக்கு முட்டாள்தனமான காரியம் ஒன்றைச் செய்துவிட்டேன் பார்' என்று வந்ததும் வராததுமாக வாசலில் காலடி எடுத்துவைத்த ஒரு இளம் டாக்டர் சொன்னர்.

அப்படி என்னதான் நடந்துவிட்டது? என்று கேட்டாள் மனைவி...

இன்று இறந்த சாட்சிப் பத்திரம் எழுதிக் கொடுத்தேன் அதில் 'மரணத்துக்கான காரணம்' என்ற கேள்விக்கு நேரே ஞாபகமறதியாக நான் என்னுடைய கையெழுத்தைப் போட்டு விட்டேன்'' என்ருர்.

---

## கண்ணன்கேட்ட கேள்வி

கண்ணனும் அவனது தாயும் ஒரு நாள் மாலைநேரம் காற்றுவாங்குவதற்காக கடற்கரைப்பக்கம் போனுர்கள். அப்போது அங்கு தங்களைப் போல பலர் வந்திருந்தார்கள். சில மணிநேரம் சென்றதும் வீட்டிற்கு திரும்பி வரும் வழியில் இரவு நேரமாகிவிட்டது. அப்போது வானத்திலிருக்கும் மின்மினிப் பூச்சிகள் தங்களின் வெளிச்சத்தின் உதவியுடன் பறந்து திரிந்தன. அதைக்கண்ட கண்ணன் அவள் தாயிடம் இந்தப் பூச்சியின் வாலில் ஒரு வெளிச்சம் ஒன்று விட்டுவிட்டுப் பிரகாசிக்கிறதே எதற்கு என்று கேட்டான்.

அதற்கு அவன்தாய் கூறியதாவது; அது ஒரு சிறு பூச்சி, அதற்கு உதவிசெய்ய எவருமில்லை. அதனல்தான் அதற்கு கடவுள் அந்த வெளிச்சத்தைக் கொடுத்திருக்கின்ருர். அதன் உதவியுடன் சீவிக்க என்று சொல்ல. அப்படியென்ருல் மனிதர்களாகிய நமக்கு ஏன் வெளிச்சத்தைக் கடவுள் தரவில்லை என்றுகேட்டான். அதற்கு அவன் தாய் கூறியதாவது, மனிதர்களாகிய நமக்கு அறிவென்ற சக்தியைத் தந்திருக்கிருன். அதைக் கொண்டு புத்தியாய் நடந்து கொள்ளும்படி என்று அவன் தாய்கூற, கண்ணன் தாயின் பேச்சைக் கேட்டுச் சிரித்து சந்தோஷப்பட்டான்.


மூர்த்தி

போட்டோ ரெக்ஸ்
10, அப்துல் ஜப்பார் மாவத்தை
கொழும்பு 12
- போன்: 35237 -




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின் சிரிப்பு



ஒருவர்: சோதிடர்... சித்திரையிலை புத்திரன் பிறந்திருக்கிறான்... பயமாயிருக்கு.

சோதிடர்: ட்யப்படத்தான் வேணும்.. சித்திரையில் திரையிருக்கு... சினிமாப் பயித்தியமா இருப்பான்.




ஒரு துணுக்கை மனதில் வைத்து இந்தப்படத்தை வரைந்தார் நமது கேலிச்சித்திரக்காரர். படம் வரைந்தபின்பு துணுக்கை மறந்து விட்டாராம்.

செய்வினை செய்பவர்: மன்னிக்க வேணும் சார்... நீங்கள் சொன்னவருக்கு என்னால் சூனியம் செய்யேலாது.

ஒருவர்: என்ன!

செய்வினைசெய்பவர்: அவர் பிளாற்றில் சீவிப்பவர்... எங்கே நான் சூனியம் செய்த எலுமிச்சம் பழத்தை புதைப்பது.

★




மனிதனை நடக்கத்தெரியாத அந்தக் குடிகாரநப்பயல் வீட்டிலா என்னுடைய மகனுக்குச் சம்பந்தம்...சீ...கடைசிமட்டும் நடக்காது.

★

பிச்சக்காரன்: ஐயா சாமி... தர்மம் போடுங்க.

தனவந்தன்: சில்லறை கையில் இல்லை அப்பா... செக்புஸ்தகம் தான் இருக்கு.


ஜோக்கிரடீஸ்



ஒருதர்: என்ன முதலாளிஇறைச்சிக்கறி சாப்பாட்டிற்கு காசு கூட்டிவிட்டீங்க

சாப்பாட்டுக்கடை முதலாளி: வெங்காயம் விலை கூடியிட்டுது தம்பி.

★



அவள் கனகம்மா பொல்லாதவள்... அந்த வழுக்கல்தலை புருஷனை தலையிலை பிலாப்பழம் சுமப்பித்தவள்.

★


ஆசிரியர்; எல்லாள மன்னனைப் பற்றி உனக்கென்ன தெரியும்.

மாணவன்: ஒன்றும் தெரியாது சார்... எல்லாள மன்னன் படமாக வரவில்லை... நாடோடி மன்னனைப் பற்றிக் கேளுங்க சொல்லுறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உன்னை அழகுபடுத்த இவ்வளவு அழகு சாதனங்கள் ஏன்?
சீமா சாரி ஒன்று அணிந்தால் போதுமே.'




சிந்தெட்டிக் ஆடை வகைகளில்
நாங்கள் பெருமையுடன் அளிக்கும் புதிய படைப்புகள்

சீமா சாரிகள் மற்றும்
நங்கையர் அணியும்
நாகரீக ஆடைகள்

# சீமாசில்க் இன்டஸ்றீஸ் லிமிட்.,

திருநெல்வேலி யாழ்ப்பாணம்

தந்தி: சீமாசில்க் தொலைபேசி: 7170

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதம தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது. பதிவு இலக்கம்: கியூபி-59/300

புலவர்: "கம்பன் நூலிலும் ஓர் கலை அழகு
முயல் மார்க் நூலிலும் ஓர் கலை அழகு."



உங்கள் அழகிய ஆடை அலங்காரத் தையல் வேலைகட்கு முயல் மார்க் நூலைப் பாவியுங்கள். வகைவகையான வர்ணங்களில் எங்கும் பெற்றுக்கொள்ளலாம்.

தயாரிப்பாளர்கள்:

சம்பியன் திரெட் மனுபக்சரிங் கம்பெனி,

கொழும்பு-12

67, பிறவுண் வீதியில் வசிக்கும் சி. சிவஞானசுந்தரம், அவர்களால் 234 கே. கே. எஸ். வீதியிலுள்ள ஸ்ரீ லங்கா அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org